தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை 6

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, பங்குனி 13 (26-3-'60). சனிக்கிழமை | இதழ் 41

புரட்சி இளைஞர் மன்றம்

அன்புள்ள தோழரே!

சென்ற இதழில் வெளிவந்த எனது மடலைப் படித்த அருமைத் தோழர்கள் பலரும் உணர்ச்சி பொங்கும் வகையில் ஆக்கமளித்துள்ளனர். போலிக் கூட்டமும் கூலிப்படையும் தமிழகத்திலே செய்துவரும் மானங்கெட்ட பிரசாரத்தை இம்மன்ற அமைப்பு முறியடிக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் பொதுச்செயலாளர் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் மன்ற அமைப்பை ஒத்திவைக்கும்படி கோரியதால், தற்காலிகமாக அதை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

பொதுவில் ஒரு கேள்வி எழும். 'பதிலுக்குப் பதில் திட்டுவதற்கு ஒரு மன்றம் தேவையா?''- நியாயமான கேள்விதான்! ஆனால் திட்டுவதல்ல மன்றத்தின் குறிக்கோள். காலிகளைக் கொண்டே ஒரு அரசியலை நடத்திவிட முடியும் என்று நம்பிக்கொண்டிருப்பவர்களைக் குறுகிய காலத்திற்குள் அந்த இடத்திலிருந்து இறக்கி வைப்பதற்கு இந்த மன்றம் பயன்படும்.

இந்த மன்றம் இல்லையென்றால் அரசியலில் என்ன நடந்துவிடும்? ஒன்றும் நடந்துவிடாது. காலிகள் கத்திக் கத்தி முடிவில் காக்கைக் கூட்டம்போல் கலைந்து சென்றுவிடுவார்கள்.

பிறகு இந்த மன்றம் எதற்கு? எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற காலித்தனமான நிகழ்ச்சிகள் நடைபெறுமலிருப்பதற்காக.

அப்படிச் செய்துவிட முடியுமா?

முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றைத் தவிர பாக்கி அத்தனை கட்சிகளும் கூலிக்குத்தான் ஆள் பிடிக்கின்றன. அதுவும் அளகேசன் பிடிக்கின்ற ஆட்கள் இருக்கிறார்களே-அவர்கள் நூற்றுக்கு நூறு கிரிமினல் குற்றவாளிகள். எப்போது அவர்களுக்குப் பணம் கிடைப்பது தடைப்படுகிறதோ, அப்போதே அவர்கள் வேறு பாதையில் போய்விடுவார்கள். ஆனால் சாவைத் துச்சமென மதிக்கும் இலட்சிய வீரர்கள், நம்மிடம் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். இரத்தக் கையெழுத்திட்டு எனக்கு வரும் கடிதங்களைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கிறது. இவர்களது உணர்ச்சிகள் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மந்திரிகளின் முன்னிலையிலே காலிகள் தரக்குறைவாகப் பேசியும் இவர்கள் பொறுமையாகத்தான் இருந்து வருகிறார்கள். இவர்களும் எழுந்து அதே பாணியில் பேச ஆரம்பித்துவிட்டால், ஒரு காங்கிரசுக்காரனும் தெருவில் நடக்கமுடியாது. காங்கிரசுக்காரன் தான் விதைத்த வினையைத் தானே அறுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். மீண்டும் இந்த முயற்சிக்கு அவன் துணிய மாட்டான். சரியாகவோ தவறாகவோ இந்த முடிவை நான் உறுதியாகவே நேசிக்கிறேன். 19-3-60 அன்று தென்றல் அலுவலகத்தில் இருநூறு காளைகளுக்குமேல் கூடியிருந்த அமைப்புக் கூட்டத்திலும் இதையே நான் வலியுறுத்தினேன். இது வேடிக்கையாகவும்அதே சமயத்தில் அருவருப்பாகவும் எனக்கே தோன்றுகிறது. காரணம் நாம் வளர்ந்து வந்திருக்கின்ற சூழ்நிலை அவ்வளவு கண்ணியமானது. மந்திரிகளே தங்களுக்கே இயல்பான முட்டாள் தனத்தையும் நாகரிகமற்ற தன்மையையும் மட்டரகமாக மேடையில் வெளிப்படுத்திக் கொள்வதால்தான், எனக்கு இந்த யோசனை தோன்றிற்று. சில்லரைகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை. கால் பந்து அடிப்பதுபோல் அவர்களை நாம் அடித்துத் தூக்கி யெறிந்துவிடலாம். மந்திரிகளுக்கு உறைக்கும்படி சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அவ்வளவுதான். ஆர்வம் மிக்க நண்பர்கள் கொஞ்சம் பொறுத்திருங்கள். அண்ணா அவர்களும் பொதுச் செயலாளர் அவர்களும் அனுமதி கொடுத்த பிறகு இதைத் தீவிரமாகத் தொடங்குவோம். ஆனால் இந்த இடைக் காலத்தில் மன்றமில்லாவிட்டாலும் நாமிருக்கிறோம். திண்ணிய முறையில் செயலாற்றுவோம்.

நான் சென்ற மடலில் குறிப்பிட்டது போலவே சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் தீவிரமாகப் பணி புரிந்து வருகிறேன். என்னுடைய வாழ்நாளிலேயே திட்ட வட்டமான தீவிர உணர்ச்சியை இப்போதுதான் நான் பெற்றிருக்கிறேன். இதை நான் பாழ்படுத்திக்கொள்ளமாட்டேன். பிற விவரங்களை அடுத்த மடலில் எழுதுகிறேன்.

அன்பன்,

கண்ணதாசன்

கட்டளை வரட்டும்; காத்திருப்போம்!

தாய் ?

வடஇந்தியாவில் நடந்த பயங்கரமான கொள்ளைகளும் கொலைகளும் மதவெறிபிடித்த சில பெரிய மனிதர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரக்கூடியனவாக இருந்தன. அன்றுவரை சகோதரர்கள் போல்பழகிவந்தஇந்துக்களும்முசுலீம்களும் ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்துக்கொண்டனர். கொலைவெறி தன் கோரத்தாண்டவத்தை பலவித உருவங்கள் எடுத்து ஆடிக்கொண்டிருந்தது. "மனிதனை மனிதன் ஏன் பகைத்துக்கொள்கிருன் ?" என்பது போன்ற கேள்விகள் மனதில் இடம் பெருத குழந்தைப்பருவம், அன்று. என் தந்தையார் இவைகளையெல்லாம் பின்பு சொல்லக் கேட்டு அறிந்துகொண்டேன், பின்னர்.

இப்பொழுது நான் ஒரு வாலிபன். காலத்தால் ஏற்பட்ட வடுக்களும் கீறல்களும் என் தந்தையின் மனத்திலிருந்து மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கலவரத்தின்போது என் தந்தை குமாரசுவாமி பிள்ளை என்னையும் என் தங்கை பிரேமாலதாயும் தூக்கிக்கொண்டு திருநெல்வேலி குடிவந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் ஆரம்பத்தில் காட்டிவந்த என் தாயின் அன்பு காலம் என்னும் வெள்ளத்தால் அடித்துப் போகப்பட்டது. என்மீது என்தாய் இவ்வளவு கோபம் கொண்டிருக்கிருளே, அது ஏன் ? எனக்கே தெரியவில்லை. என்தங்கை பிரேமா மீது உயிரை வைத்திருக்கும் அவள் என்னை மட்டும் வெறுப்பானேன் ? "டேய் சேகர் ! நீ வந்தவேளை நானும் உன் தகப்பனும் நிம்மதியான குடும்ப வாழ்க்கையை விட்டுவிட்டு இங்கு வந்து கட்டப்பட வேண்டியிருக்கிறது" - இதுதான் தினமும் என்மீது என்தாய் வீசும் குற்றச்சாட்டு. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்பார்கள். ஆனால் நான் எனது தாய்க்கு...அன்பு,பண்பு, பாசம் இந்த மூன்று சொற்ருெடர்களுக்கும் அர்த்தம் புரியாமலே என் வாழ்நாளைக் கழித்தேன். அமைதியில்லாத மனம்,கொந்தளிக்கும் கடல் குமுறும் எரிமலை, முதலியவற்றைவிட ஆபத்தானது. மனநிம்மதியின்மை காரணமாகத்தானே கொலைகளும் கொள்ளைகளும் நடைபெறுகின்றன. மாற்ருந்தாய்ப் போக்கிலே நடந்த என்தாயின் செய்கை இந்தச் சமுதாயத்தை, துரோகிகள் கூடாரமாக, துன்மார்க்கர்கள் வீடாக நினைத்து வெறுக்கும்படி செய்தது. அன்பு என்பதற்கும் பாசம் என்பதற்கும் பொருள் சொல்ல என் வாழ்வில் யாராவது குறுக்கிடமாட்டார்களா என்று ஏங்கியது என் பேதை நெஞ்சம். உற்ருர், உறவினர், பெற்ருேர் அத்தனைபேரும் வெறுக்கும்பொழுதுதான், வாழ்க்கையில் ஏமாற்றம் என்ற சொல்லுக்குப் பொருள் கிடைக்கிறது. இந்தச் சமயத்தில்தான் நொந்துபோன என் உள்ளத்திற்கு ஆறுதலளிக்க என் அருமை நண்பனுக வந்துசேர்ந்தான் அப்துல்மசீது. வட இந்தியாவில் முசுலீம்களும் இந்துக்களும் ஒருவரை ஒருவர் பகைவராக எண்ணிக் குத்துவெட்டுக்கலையை பயின்றுகொண்டிருந்த காலத்தில் கூடத் தென்இந்திய முசுலீம்களும் இந்துக்களும் சகோதரர்களாகத் தமிழ்ப்பண்பு பிசகாமல் வாழ்ந்து வந்தார்கள். நண்பன் மசீத் வெம்பிக் கிடந்த என் மனத்திற்கு ஆறுதல் அளித்தான். பட்டமரம் போன்ற என் வாழ்க்கையில் அன்பு என்ற நீரைத் தெளித்தான், அக்குணக்குன்று அன்பும் பண்பும் பெற்றெடுத்த அருமைக் குழந்தை. தன் மதத்தின்மீதும் தன் இனத்தார்மீதும் நீங்காத பற்றுக்கொண்டு பிற மதத்தாரைக் கேவலமாக எண்ணும் பெற்ருேர்களுக்கு மகனுகப் பிறந்தான். சிப்பியின் மடியிலே முத்து. அவன் தங்கை சபிதா அழகு என்னும் தந்தைக்கும் பண்பு என்னும் தாய்க்கும் பிறந்த வண்ணத்தாரகை. முசுலீம் மதக் கோட்பாட்டை இம்மியளவு விடாமல் மசீத்தின் பெற்ருேர்கள் பின்பற்றி வந்தாலும், நான் அவனின் உயிர் நண்பன் என்பதினுல் என்மீது ஓரளவு அன்பு வைத்திருந்தார்கள். ஆனுல் அவள்.....சபிதா.....அந்த அழகுத் தென்றல், ஏடெழுதிய கவிஞர்களின் எண்ணத்தில் தோன்றிய அந்தச் சித்திரப்பெட்டகம், என்மீது பெருமளவு நம்பிக்கை வைத்திருந்தாள். ஆமாம். அன்பு என்ற சொல்லைத் தேடி அலைந்த எனக்கு அந்தச் சொல்லையும் சொல்லுக்குப் பொருளையும் கற்றுத் தந்தாள். என்னையும் ஒருத்தி நேசிக்கிருளா...? என்மீதும் ஒருத்திக்கு அன்பு இருக்கிறதா...? உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவன் ! வீட்டிலே என் தாயின் மூலம் ஏற்படுகின்ற மனக்குழப்பத்தையும் அமைதியின்மையையும் அவள் அன்புமுகம் கண்டு போக்கிக் கொள்வேன். மருந்தாலும் தீராத என் மனநோய் அவள் மலர்முகத்தின் குளிர்விழியால் மாண்டது. வானப் பருந்தாலும் இயலாத கூர்ந்த பார்வையோடு கனிவுமொழி பணிவிரக்கம் இவற்ருேடு அன்பையும் சேர்த்து எனக்கு ஊட்டினுள். "என்னுடைய துன்பங்களை நான் பிறரிடம் கூறும்பொழுது என மனதிலிருந்து பாரம் குறைந்து அமைதி ஏற்படுகிறது. என் துன்பத்தை கேட்கிறவன் என் ஆருயிர் நண்பனுயிருந்தால் மிகுந்த அமைதி ஏற்படுகிறது. நண்பனைவிட என்மீது அன்பு செலுத்தும் ஒரு பெண் என் துன்பங்களைப் பரிவோடு கேட்டால் எனக்கு முழு அமைதியே ஏற்படுகிறது" என்று ஆங்கில அறிஞன் ஒருவன் சொன்னதன் பொருளை, நான் படிக்கும்பொழுது உணராவிட்டாலும் இப்பொழுது உணர்ந்துகொண்டேன். எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு உலக இலக்கணப்படி காதல் என்ற கயிற்றில் கட்டப்பட்டாலும் நான் அதைக் காதல் என்று சொல்ல தயாராக இல்லை. உயர்ந்த அன்பு என்றே அழைத்தேன். ஏனென்ருல் நான் அவளுக்கு, உள்ளத்திற்கு உவகை ஊட்டும் காதல் கடிதம் தீட்டவில்லை பார்க்கிலோ பனிமலர்ச் சோலையிலோ சந்திக்கவில்லை. சினிமாவிலோ ஆற்றங்கரைமீதோ எங்கள் சந்திப்பை நடத்தவில்லை. உள்ளத்தால் என்னை நேசித்தாள். நானே அவளில்லையேல் நானில்லை என்று நினைத்து என் மனத்திலே பேசும் ஓவியமாக வைத்து வாழ்த்தினேன். தெருவில் எத்தனை பெண்கள் காஞ்சீபுரம் பட்டாலும் காசிச் சோளியாலும் அசந்தா கொண்டையாலும் அற்புதமான அணிகலன்களாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு தினம் தினம் போகிருர்கள். அவர்களையெல்லாம் நான் ஏறெடுத்துப் பார்த்தது கிடையாது. காரணம். என் சபிதாவிற்குண்டான இற்கையான அன்புநெஞ்சம் அவர்களுக்கில்லை. ஆனுல் இயற்கையிலே என்னேடு பிறந்த கோழை நெஞ்சம் என் வாழ்க்கைக்குப் பெரும் இடியாக வீழ்ந்தது. சபிதாவின் முறை மாப்பிள்ளை ஒருவன் பஞ்சாப்பில் இருப்பதாகவும் அவனுக்கு அவளை திருமணம் செய்து வைப்பதாகவும் முதலில் இருந்தது, திட்டம். பின்பு அவன் உயிருடன் இருக்கிருனு இல்லையா என்ற சந்தேகத்தினுல், வேறு ஒருவனுக்கு நிச்சயம் ஆகி நிச்சயதாம்பூலம் நடந்துவிட்டது எங்கள் பிணைப்பிற்கு எதிராக மதம் என்னும் மாபெரும் சுவர் தடையாக நின்றது. மதவெறி பிடித்த அவன் பெற்ருேர்கள் எனக்கு அவளைத் திருமணம் செய்துவைக்க ஒப்பவில்லை.கதறினுள். கண்ணீர்விட்டாள். பாவம், அவள் பெண். அதற்குமேல் அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நடைப்பிணமாக அலைந்து கொண்டிருக்கிருள் என்று கேள்விப்பட்டேன். நான் ஒரு ஆண். என்னுல் எதையும் செய்யமுடியும். இருந்தும் அழுது அழுது என் உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடுவதைத் தவிர வேறு எதையும் செய்யமுடியாத சூழ்நிலையில் இருந்தேன். காலம் என்னும் வண்டியிலே நான் பயணம் போவது எனக்கே தெரியவில்லை. என் சபிதாவிற்கு திருமணம் ஆகிவிட்டது. ஐயோ ! பைத்தியம் பிடித்தவன்போல் அலைந்தேன். தாயோ இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டுஎன்னை வீட்டைவிட்டுத் துரத்த முயற்சி செய்தாள். தந்தையோ தாயின் கட்டளைக்கு அடிபணிந்து கிடந்தார். பெற்றதாய் மகனை ஏன் வெறுக்கிருள் ? எனக்கு ஒன்றும் புரியவில்லை. புரியும்படியான சந்தர்ப்பம் ஒன்று விரைவில் வந்தது. ஊரெல்லாம் பைத்தியம்போல் சுற்றி அலைந்துவிட்டு வீட்டிற்கு வந்த என் கையில் ஒருகடிதத்தை என் தந்தை கொடுத்தார் என் தந்தை குமாரசுவாமிக்கு என் தந்தை பஞ்சாபில் இருந்து எழுதிய கடிதம் அது. கடிதத்தை படித்தவுடன் இந்த உலகத்தின் நினைவே இல்லை ஆயிரம் தேள்கள் கொட்டியது போன்ற ஒரு உணர்ச்சி அந்தக் கடிதம் இதுதான்.

★

அன்பு நண்பன் குமாரசுவாமிக்கு,

சலால்மொகிதீன் எழுதிக்கொண்டது நாம் இருவரும் திருநெல்வேலியிலிருந்து பஞ்சாப்பிற்கு வந்து பல ஆண்டுகள் சகோதரர்கள்போல் பழகி வாழ்க்கை நடத்திவந்தோம் நம் இருவரின் நட்பை பார்த்து உலகமே பொருமை கொண்டது. மதக்கொடுமையால் இந்து முசுலீம் கலவரத்தின்போது என் மனைவி கொல்லப்பட்டாள். என் மகனை, சின்னஞ்சிறு சிறுவனை உன்னிடம் ஒப்படைத்துவிட்டு உயிருக்குப் பயந்து ஓடிய நான் தற்செயலாகத் தப்பி இன்றுவரை காலத்தை ஓட்டிவிட்டேன். நாளை திருநெல்வேலிக்கு புறப்படலாம் என்றிருக்கிறேன். என் மகன் இப்பொழுது கட்டிளங்காளையாக இருப்பான். அவனுக்கு உங்கள் தெருவில் இருக்கும் சபிதா என்கிற முறைப் பெண்ணை நிக்காக் (திருமணம்) செய்வதற்கு ஓடோடியும் வருகிறேன்.

இப்படிக்கு
உங்கள் உயிர் நண்பன்,
சலால்மொகிதீன்.

—வீரமாமுனிவர்.

தோல் கிழிகிறது

ஐக்கிய நாடுகளில் படைச்செலவு அதிகம். அதனுல் தொல்லையுற்ற பொது மக்களுள் ஒருவரின் ஆராய்ச்சி முடிவு இது: 'இந்நாட்டுப் படை வீரன் ஒருவனுக்குக் கம்பளிச்சட்டை தைக்கத் தரப்படுவது 20 ஆடுகளின் மயிர் மட்டுமில்லை; வரி செலுத்துவோர் பத்துப் பேரின் முதுகுத் தோலும்கூட."

★

பிறந்தது எப்போது ?

மேலைநாட்டு வானெலி நிலையம் ஒன்றில், 23வயதான சார்லசு காலிங்வுட் இளைஞர் ஒருவருக்த வேலைகிடைத்தது. குறைந்த வயதினர் என்று தெரிந்தால் வேலை தரப்படமாட்டாது. ஆதலால், மனுவில் அவர் வயதை 28 என்று போடச்சொன்னுர், ஒரு மேலதிகாரி. மறுநாள் ஓர் ஏட்டில் முதல் பக்கத்தில், "சி பி எஸ் வானெலியில் சார்லசு காலிங்வுட் என்ற புதிய இளைஞர் பணியாற்றுகிருர்" என்ற செய்தியும், மூன்ரும் பக்கத்தில், "திரு. ......ம் திருமதி ......ம், தமது திருமணத்தின் 25-ம் ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாடினர். இவர்கள் [சார்லசு காலிங்வுட் அவர்களின் பெற்ருேர் ஆவர்" என்ற செய்தியும் வெளியாயின.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 26-3-'60 | இதழ் 41

மக்களை ஏமாளிகளாக நினைத்தோரே! சீமாலியின் பேச்சைக் கேட்டீரோ?

கறை படிந்த கைகள்!

துளைத்த குண்டுகளால் வெடித்த மண்டையோடுகளை அணைத்துக் கொண்டதால் படிந்த குருதிக்கறைமட்டுமில்லை.

உடன்பிறந்தார் படுகொலைக்காளானதை எண்ணியெண்ணி ஏழையர்வடித்த கண்ணீர், அக்குருதிக் கறையைக் கரைத்து விட்டது. ஆனாலும் கொதிப்பான ஏழையர் கண்ணீரால் கூடக் கழுவ முடியாத களங்கக்கறை காங்கிரசார் கைகளில் ஒட்டிக்கிடக்கிறது. வாள் கொண்டு கூட அறுத்தெறிய முடியாத அளவு அவர்கள் நெஞ்சிலே களங்கக்கறை வேர்விட்டுக் கிளைவிட்டு விழுதும்விட்டுப் பரவி நிற்கிறது!

சொல்லமுடியாத் துயரங்கள்! அத்துணையும் காங்கிரசாரின் கறைபடிந்த கைகளால் வளர்ந்தெழுந்த துன்பக் காட்சிகள்!

அரசினர் எத்தனையோ உதவிகளைச் சொல்கின்றனர்.

ஆயிரம் ஆயிரம் நிறுவனங்களின் பட்டியலைக்காட்டி, "கண்டீரோ? அரசினர் உதவியுடன் நடக்கும் தொழில்களை அறிந்தீரோ?" என்றலறுகின்றனர்.

ஒன்றுந்தெரியாத அப்பாவிகள் "ஆகா! இத்துணை உதவிகளா?" என்று இதயத்தை நனைத்துக் கொள்கின்றனர் நம்பிக்கை நீரால். "ஆமாம்! அவ்வளவும் உங்களுக்கே! எள்ளளவும் ஐயம் வேண்டாம்!" என்கின்றனர் காங்கிரசார். நடப்பதென்னவோ முழுக்க முழுக்க ஏமாற்று வேலைகளும், துரோகச் செயல்களும் தாம்!

செழித்துக்கொழுத்து அலையும் இந்தமோசடிவித்தை நாடெங்கும் துணிந்து செயல்படுகிறது. அரசினர் பொதுமக்கள் நன்மைக்கு என்று ஒதுக்கும் பணம் நேரடியாக அதற்கே செல்வதில்லை. இடையிலே பல ஊழல்கள்; தரகுகள்; மோசடிகள்; கைக் கூலிகள்; ஏமாற்று வேலைகள்.

கிணறுவெட்டுவதற்கு மானியம் என்றார்கள்; முழுத்தொகையும் உழவனின் கைக்குச் சேரவில்லை!

"அகதிக"ளுக்குக் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டனர். ஆனால் "அகதிகள்" என்று வந்தோர், கடைகளை உள்ளூர்க்காரர்களுக்குக் வாடகைக்கு விட்டு விட்டுக் கள்ளவருமானம் தேடினர்!

குடிசைத் தொழில்களுக்கு உதவித் தொகைகள் என்றனர். ஆனால் உதவி பெறுகின்ற அத்தனைபேரும் கதராடைக்காரர்களாக இருக்கின்றனர். யார் இந்த மனிதர்கள்? உண்மையிலேயே ஏழைகளுக்கு உதவுவதற்கென்று இந்த நிதிகள் தொடங்கப்பெற்றனவா? அல்லது, பிழைப்பற்ற காங்கிரசார்க்கு உதவுவதற்கென்றே இந்த உதவிகள் தொடங்கப்பட்டனவா? அறிய முடியாத செய்திகள்! ஆமாம், ஆழத்தில் புதையுண்டு விட்ட கள்ளத்தனங்கள்! ஆனால் அத்தனையையும் சிந்தாமண் தேசுமுக் மக்கள் மன்றத்திற்கு இழுத்து வந்தார்.

"ஆட்சியிலிருக்கும் கட்சியினரும் சரி; அவர்களுக்காகப் பணியாற்றுகின்ற அலுவலர்களும் சரி; அவரவர் திறமைக்கேற்பப் பொதுமக்களைச் சுரண்டுகின்றனர்; பொதுப்பணத்தைச் சூறையாடுகின்றனர்!" என்ற குற்றத்தைச் சாட்டினார் தேசுமுக் அவர்கள். நேருவின் சீடர்கள் அத்தனையும் தவறென்றனர். 'பிடிக்காத மனைவி ஆள்வதால், தொட்டதற்கெல்லாம் கறை கற்பிக்கிறார் தேசுமுக்! நாநர்த்தனமாடும் அவர் கூற்றுத் தவறானது; பிழையானது; ஆதாரமற்றது!" என்றனர்.

பொய்மாளிகைகள் நெடுநாளைக்கு நிலைப்பதில்லை; பெருமழை பெய்யத் தொடங்கியதும் கரைந்தழிந்து விடுகின்றன. அந்த உண்மைதான் இப்போது பளிச்சிடுகிறது! "சிந்தாமண் தேசுமுக் சொன்னவையத்தனையும் உண்மையே! சற்றேனும் தவறில்லை!" என்று வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார், தில்லியமைச்சர் ஒருவர். கல்வியமைச்சைச் சேர்ந்த அவர் பெயர் டாக்டர் கே. எல். சீமாலி. அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்க அஞ்சுகிறார் பதவிப் பொறுப்பில் இருப்பதால். ஆனாலும் சுட்டிக் காட்டி விட்டார், தன் நெஞ்சத் துடிப்பை!

17-3-60 அன்று புதுதில்லியில் நடந்த சமூக நல ஊழியர்கள் மாநாட்டில் தனது பார்வைக்கு வந்த சிலபல களங்கங்களை எண்ணிப் பார்த்து, சமூகஊழியர்கள் எனப்படுவோர் பொதுநிதிகளைத் தவறான வழிகளில் செலவழிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். "நான் பல நேரங்களில் பல சமூக ஊழியர்கள் தம் பொறுப்பில் உள்ள பொதுநிதியைத் தவறான வழிகளில் பயன்படுத்துவதாக எச்சரிக்கை படுத்தப்பட்டிருக்கிறேன். அப்போது நிதி எதற்காக ஒதுக்கப்பட்டதோ, அதற்காகவும் செலவழிக்கப்படவில்லை. அத்தோடு அந்த நிதிகள் பொது மக்களுக்குப் பயன்படாது தனியார்க்குப் பயன்படுகின்றன. பொது நிறுவனங்களுக்குக் அரசினர் நிதி உதவிடுவது ஊக்கம் தருவதற்குத்தான்!" என்பதாக அவர் பேசியுள்ளார்.

அதே நேரத்தில் அவர், "பொது நிறுவனங்களில் உள்ளாரிடை தியாக உணர்வும், அர்ப்பணிக்கும் மனப்பான்மையும் மறைந்து வருவதை நான் அறிகிறேன். அரசினர் தரும் உதவிப்பணம் தந்த அளவு பயன்படாது, இழப்பையே காட்டுகின்றன!" என்பதாகவும் பேசியுள்ளார். அமைச்சரின் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கிறது என்பது அவர் பேச்சிலிருந்து தெரிகிறது. அதே நேரத்தில் தவறு செய்வோரைக் தண்டிக்கமுடியாது அமைச்சர் திண்டாடுவதையும் அறிகிறோம்! யாரைச் சொல்லி நோவது இந்தக் குறைபாட்டிற்கு? கண்டிக்கத் துணிந்த அமைச்சர் தண்டிக்கத் துணியாதது ஏன்? ஏன்?

இந்த நேரத்திலே மற்றொன்றையும் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம். மாநகராட்சிகளும், நகராட்சிகளும் அரசின் பிற அமைப்புக்களும் பொது நிறுவனங்கள் என்று சொல்லப்படுபவற்றிற்கு ஆண்டு தோறும் நிதி உதவிகள் அளிக்கின்றன. ஆனால் அந்த நிதி உதவிகள் தவறான வழிக்கே பயன்படுகின்றன. வேண்டியோர் வேண்டாதோர் பார்த்துத் தரப்படுகின்றன. நல்லோர், தீயோர் என்று பார்த்து நிதி உதவியளிப்பதே அவர்கள் கொள்கையாக இருக்க வேண்டும். பொதுவுடைமையரா? காங்கிரசாரா? என்று பார்த்து உதவியளிப்பது தவறு.

மேலும், சமயச் சார்பற்ற அரசு எனப்படும் இவ்வரசு பல சாதி மன்றங்களுக்கும் உதவியளிக்கிறது. இது மறைந்து கொண்டிருக்கும் சாதிக் கொடுமையை மறுபடியும் தழைக்கச் செய்வதாகும்! இந்தக் கொடுமை தகர்க்கப்பட வேண்டுமானால், அரசினர் தரும் பொது உதவி நிதிகள் கட்டாயம் நடுநிலையோடும் நல் நோக்கோடும் தரப்பட வேண்டும். அது நடவாத வரையில், தூய்மை எழுவது முயற்கொம்பே! உண்மை தழைப்பது, வேடிக்கைப் பேச்சே!

இதுவரையும் பொதுப் பணத்தைச் சூறையாடிக்கொண்டிருப்போர்க்கு, சிந்தாமண் தேசுமுக் தந்த கசையடி போதாதென்று சீமாலியும் தருகிறார். அந்தத் திருட்டுப் பெருச்சாளிகள் இனியாகிலும் திருந்துமா? சுவை கண்ட பூனை உறிகண்ட இடமெல்லாம் தாவுமென்பார்கள்! இனிமேலாகிலும் அவைகள் தாமாகத் திருந்துமா? ★

தலைமைக்கழக அறிக்கை எண் 2/60

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பிரச்சாரக் குழு.

நமது இயக்க மாணவர்களைக் கூட்டி அவர்களுக்கு நமது இயக்க ஆக்கவேலைகளையும் நடைமுறைகளையும் தெளிவான முறையில் அறிவாக்கவும், கொள்கைப்பிரச்சாரம் புரியப் பயிற்சி தரவும், ஆண்டுதோறும் கோடை விடுமுறையில் கொள்கை விளக்கப் பிரச்சாரப் பயிற்சி நடைபெறும். இவ்வாண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவும், வேலைதிட்டங்களை வகுக்கவும், நண்பர் கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ. (ஆனர்சு) அவர்களைச் செயலாளராகவும்; நண்பர்கள் பி. வி. செழியன், என். சுப்புராயன் பி. காம், இரா. வெங்கடேசன் பி. ஏ. (ஆனர்சு), இரா. இராசகுமார் பீட்டர், பி. இராசாராமன் இவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டுஇக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சீரிய முயற்சியுடன் செவ்வனே நிறைவேற்றித் தரும்படி இக்குழுவையும் இதற்கு உறுதுணை புரியும்படி ஏனைய மாணவத் தோழர்களையும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்,
பொதுச்செயலாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

எழிலகம்,
சிதம்பரம்.
12-3-60.

ம. பொ. சி. மடல்கள்!

நா வியாபாரிகளின் பழஞ்சேதி! நாடறிந்த பச்சைப் பொய்!

கூழுக்கும் ஆசை! மீசைக்கும் ஆசை!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் படைவீரர் தம் பாசறை என்பதை மதி குறைந்தோர் தவிர ஏனையோர் மறுக்கத்துணியார். ஆனால் தமிழ்நாட்டிலேயிருக்கும் மட்டரகப் பிறவிகளிலேயே முதலிடம் பெறத் தக்க சிலர் மட்டும் மானங் கெட்ட தன்மைகளை அடிக்கடி விளம்பரத்திலே காட்டுகிறார்கள். துட்டுக்கு எட்டடி பாயும் தொண்டர்களை விட்டுத்தள்ளி, விவேகசிகாமணியாக இருக்கும் சிவஞானக் கிராமணியின் செயல்களைக் கவனிப்போம். முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதையே தன் வேலையாகவும் தொழிலாகவும் வைத்திருக்கும் இந்த 'நாகரிகப் பைத்தியத்தைப்' பற்றி எழுத வேண்டாம் என்று பலமுறை நேரிலும் கடிதங்களிலும் சொல்லியிருக்கும் நண்பர்களிடத்திலே மன்னிப்பைக் கேட்டு இதனை எழுதுகிறேன். பல்போன பாட்டிகள் கூடத் தங்களின் பழையநாள்பக்குவத்தைப் பற்றிப் பேசத் தவறுவதில்லை. அந்த முறையில் அரசியலில் சொல்போன செல்லாக்காசு சிவஞானம் மதுரைக் கூட்டம் ஒன்றிலே, முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டுவிடும் என்று புலம்பினாராம்! அந்தச் சிறு கூட்டத்தைக் கண்ட நண்பர்கள் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்கள்.

இரட்டைக் குதிரை சவாரியை எண்ணி இருந்த கழுதையையும் இழந்துவிட்டார், அந்தோ!

இந்த இருசப்பத் தெரு மாவீரரைச் சுற்றி அந்த விளையாட்டு மேடையில் பேசியவர்கள் எல்லாம் கழகத்தின் தலைவர்களைத் திட்டினார்களாம். அந்தக் கும்பலில்தான் சிவஞானக் குமரி "தூத்துக்குடித் தேர்தலில் முன்னேற்றக் கழகத்தை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்!" என்று அறிவித்தாராம்! தன்னைத்தானே தலைவராக்கிக்கொண்ட சிவஞானக் கன்னியினுடைய கண்சாடைக்குக் காத்திருக்காத தூத்துக்குடித் தொண்டர்கள், "முன்னேற்றக் கழகத்தையே ஆதரிப்போம்!" என்று ஒருநாள் முன்னதாகவே சொல்லிவிட்டார்கள். 'தனிப்பெரும் தலைவன்' என்ன செய்திருக்க வேண்டும்? பொதுச்செயலாளர் எனப்படும் தண்டா முண்டாக் கழகத்தின் பொம்மை என்ன செய்திருக்க வேண்டும்? தூத்துக்குடித் தொண்டர்கள் எனப்படும் எடுபிடிகளைக் கண்டித்திருக்க வேண்டும்! இவர்கள் இருவருக்குமே வேறு வேலைகள். கட்டபொம்மனுக்குக் கால்பிடித்துத் தங்கள் வயிறுகளைக் கழுவவேண்டிய கடமைகள் இருந்ததால் அந்தக் காரியத்தைக் கவனிக்க முடியவில்லை. அதனால்தான் தூத்துக்குடித் தீர்ப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேட்டு வைத்துவிட்டதாகப் பேசிக்கொண்டார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் முதல் இடைத்தேர்தலில் போட்டியிட்டபோது சிவஞானக்குமாரி கம்யூனிஸ்ட்களுடன் கைகோர்த்துத் திரிந்தார்! எத்தனையோ கைமாறிப் பழக்கப்பட்டவர்கள் அவர்கள்.-நல்ல பொருளில் சொல்கிறேன். அவர்கள் ஒரு காலத்தில் காங்கிரசுக்காரர்கள்; பிறகு கம்யூனிஸ்ட்கள். இப்போது அவர்களுக்கு முன்னேற்றக் கழகத்தை ஏசிப்பேசும் வாய்ப்புக் கிடைத்தது இம்முறை நடைபெற்ற இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட்கள், கழக அபேட்சகரை ஆதரித்துவேலைசெய்ய முடிவு செய்தனர். மூலையிலே நின்ற சிவஞானக் குமரியார் "கம்யூனிஸ்ட்கள் மட்டுமென்றால் ஆதரிப்பேன்; இப்போது எதிர்ப்பேன்!" என்றபாணியிலே தன் குரலை மாற்றிக்கொண்டார்! தன்னுடைய குப்பலுக்குத் தலைமை வகிக்கும் தம்பிரான் கழகத்துடன் போட்டியிட்டிருந்தால் வாய் கிழியப் பேசுவதில் பொருளுண்டு. இரண்டுமில்லாமல், வலியக் கூப்பிட்ட பின்பும் எட்டி உதைத்து விட்டுப்போகிறவர்களைக் கண்டால் சிலதுகளுக்குப் பொல்லாக் கோபம் வருவதுண்டு. அந்த வகையிலே செங்கோல் சிங்காரமும் சினந்து கொள்கிறார்! முன்னேற்றக் கழகத் தலைவர்கள், சிரஞ்சீவும் சிகாமணிகளைக் கண்டு பேச வேண்டுமாம்; பிரிவினையைக் கைவிடவேண்டுமாம்! எந்த இலட்சியமும் இல்லாத ஒரு பிரேத மனிதனை நம்பிப் பிரிவினைக் கொள்கையை கைவிட வேண்டுமென்று வார்த்தைகளைக் கொட்டுவது, நடைபிணங்கள் நம்பக் கூடியனவே தவிர - நல்லவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவல்ல! சிவஞானத்தினுடைய தமிழரசுக் கழகத்தை முன்னேற்றக் கழகம் ஒரு விளம்பரத் தட்டியைப்போல, எவருக்குத் தேவையானாலும் இரவல் போகக்கூடிய பொருளாகவே மதிக்கிறது என்பதை அவர் இனியாவது உணருவது நல்லது! பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே சிவஞானகுமரியால் ஈன்றெடுக்கப்பட்ட கலாச்சாரக் கழகம், இன்னும் நடமாடச் சக்தியற்று முடமாகக் கிடக்கும் காட்சியை காணச் சகிக்காமல் ஒதுங்கியிருப்போர் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசியல் வரலாறு உணர்ந்தவர்களுக்கும் சிவஞானச் சீடர்களுக்குத் தெரியாத பல செய்திகள் தெரியும். தன் பிழைப்புக்கு ஒரு கட்சியைத் துவக்கிய இந்தச் சிலம்புக்கள்வரைப் பற்றிய கடந்தகாலச் செய்திகளை எண்ணிப்பார்த்தால் தமிழ்நாட்டு அரசியலில் இப்படியும் சில அவலட்சணங்கள் இருப்பது அவமானச் சின்னங்களுக்கு ஒப்பாகும் என்றே எவரும் கூறுவர். எனவே புதிய சீடர்களுக்குத் தங்கள் குருவின் பழைய செய்திகள் சிலவற்றைச் சொல்லுவது, பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன். படித்துப் பார்க்கட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தூற்றுகின்ற சிவஞானக் கிராமணி அரசியலில் நடமாட இலாயக்கற்றவர் என்பதை, அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கீழே தரப்படுகிறது:

"துரைக்கண்ணு முதலியார்
காங்கிரஸ் தேர்தல் அதிகாரி
சென்னை,
11-11-'52.

அன்புடையீர்,

வணக்கம். 10 11-52-ல் தாங்கள் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றேன். நான் தமிழரசுக் கழக அங்கத்தினராகவும் தலைவராகவும் இருப்பதால், நான் காங்கிரஸ் பிரதிநிதித் தேர்தலில் போட்டியிட அருகதையற்றவன் என்று சிலர் ஆட்சேபணை மனு அனுப்பி உள்ளதாகக் கூறுகின்றீர்கள் தமிழரசுக் கழகம் தனி அரசியல் கட்சியல்ல. காங்கிரசுக்கு விரோதமாக எந்த நாளிலும் அக்கழகம் சென்றதில்லை. காங்கிரசுக்கு விரோதமாக இருக்கும் அல்லது நடந்து கொள்ளும் எவரும் தமிழரசுக் கழகத்தில் அங்கத்தினராக இருக்க முடியாது கழக அமைப்பு விதிகள் சமீபத்தில் மாற்றப்பட்டுள்ளன. தமிழரசுக் கழகத்தின் கொள்கைகள் காங்கிரஸ் மகாசபையின் கொள்கைகள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்களுக்கு இணங்கியது. அல்லது அதே கொள்கைகள் தாம். வேறானதோ விரோதமானதோ அல்ல. ஆகவே காங்கிரஸ் அமைப்பு விதிகளின்படியே தமிழ் அரசுக் கழகத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் காங்கிரசுப் பிரதிநிதித்வத் தேர்தலில் போட்டியிட உரிமை பெற்றிருக்கின்றனர். எனவே ஆட்சேபணையை நிராகரித்து எனது அபேட்சையை அங்கீகரிக்க வேண்டுகிறேன். எனது சமாதானம் திருப்தி அளிக்காவிடில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு எனது நிலையை விளக்கி அவர்களுடைய பதில் கிடைக்கும்வரை எனது அபேட்சைப் பத்திரத் தீர்ப்பைத் தள்ளிவைக்க வேண்டுகிறேன். நன்றி.

ம. பொ. சிவஞானம்."

பதவியைத் தேடி அலைந்த அன்றைய சிவஞானம் - மாபெரும் தலைவர் - காங்கிரசுக் கமிட்டித் தேர்தல் அதிகாரியாக இருந்த துரைக்கண்ணு காலடியில் தனது கட்சியின் மானத்தைக் காணிக்கையாக்கிவிட்டதற்கு, இதைவிட வேறு சான்று தேவையில்லை. இப்போது வெளியேறிவிட்டோம் என்பார் அந்தப் புதுக்குமரியார் - ஆனால் அந்த நேரத்துச் செயல்களையே - தேசிய மாயையிலேயே தான் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறுத்துவிட முடியாது. தமிழ்நாட்டுப் பொதுமக்கள் இவரை நம்பித் தீரவேண்டி எதையெதையோ சொல்லித் திரிகிறார்கள். பாவம்! சொந்தச் சரக்கு இல்லாதவர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் விரைவில் அழிந்துவிடப்போகிறது என்று தெரிவிக்கும் சிகாமணித் தலைவர், அந்த நாட்களில் காங்கிரசுக் கட்சியின் எடுபிடியாக இருந்துகொண்டே தண்டாமண்டாத் தொண்டர்களுக்குத் தலைவராக இருக்க விரும்பியதால் "ஒன்று மட்டும் நிச்சயம். கடந்த ஐந்தாண்டுகளாகத் தமிழரசுக் கழகமும், அதன் தலைவன் என்ற முறையில் நானும் எந்தக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப்பிடித்தோமோ அவற்றிலிருந்து பின்வாங்கக்கூடிய எதுவும் நிகழ்ந்துவிடாதென்று தமிழரசுக்கழகத் தோழர்கள் நம்பலாம்" என்றும் எழுதி வைத்திருக்கிறார், தன்னுடைய பத்திரிகையின் 16-11-52 ம் நாளிட்ட இதழில்! அதன் பிறகு கடந்துபோன ஆண்டுகளில் அவருடைய அந்தர்பல்டிகளைப் பற்றி தமிழ்நாட்டு அரசியல் மிக அதிகமான செய்திகளையே வைத்திருக்கிறது. இப்போது இவரையே நிரந்தரத் தலைவராகக் கொண்டாடும் 'எக்ஸ்ட்ராக் குமாரிகளுக்கெல்லாம்' சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்த டாக்டர் சுப்பராயனிடம், 'கலாச்சாரத்தலைவர்' கட்டியம் கூறி நின்று, டில்லிக்குப் பறந்துபோய், பந்துவுக்குப் பாதம்தாங்கிய பழைய செய்திகள் தெரிந்தால் தலைவரின் தரம் புரிந்துகொள்வார்கள்! காற்றடிக்கும்பக்கமெல்லாம் ஓடுவோர் உணரட்டும்! இருசப்பத் தெருக் கும்பல் தமிழ்நாட்டுக்கே வழிகாட்டும் இயக்கம் நடத்துகிறதாம்! கொள்கைகள் என்னவென்று சொல்லத் தெரியாத தலைவர், காங்கிரசு மேலிடத்தார் உறுப்பினர் இரசீதுப் புத்தகங்களை அனுப்பி வைக்கும்படி தந்தி அனுப்பியபோது, விளக்கம் சொல்லமுடியாமல் விழித்தார். கடைசியில் பதில் சொல்லும்போது "எங்களிடமிருந்த கொள்கை அச்சடித்த புத்தகம் லட்சியங்களை விளக்கும் பிரசுரங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. ஆகவே. காங்கிரசின் இலட்சியம்தான் என்று எழுதிப் போட்டுவிடுங்கள். எதுவும் வித்தியாசம் இருக்கிறதா என்றால் கலாச்சாரத்துறையில் பாடுபடுவது என்று எழுதிவிடுங்கள்......" என்றுதான் மழுப்பிக்கொண்டாராம்; கண்ணகி அச்சகத்துக்குள்ளே ஓடி ஒளிந்துகொண்டாராம்! பேடித்தன்மையை அரசியல் அணிகலனாகக் கொண்டிருக்கும் சித்து விளையாட்டுச் சிவஞானம், அறிஞர் அண்ணாவைப் பழிக்கிறார் என்றால் அவருடைய பக்குவம் அப்படி! எத்தனை விளக்கம் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளார்! "எருமைக் கன்றுக்குட்டி என்று பாட்டு எழுதினவனெல்லாம் இப்போது கவிஞன்" என்று 'பேரிகை' ஆசிரியர் கேட்டபோதுகூட இவர்களுடைய உடலில் சூடேறவில்லையே! இப்போதா சொரணைப்படுவார்கள்? தரங்கெட்ட தலைவர், தக்க பதில் தருவாரா? தொடர்ந்து கேட்போம்!

— 9-ம் பக்கம் —

முத்துக்குயிலின் மோகன கீதங்கள்! செத்துமடிவதோ, சீவனின் ஆசைகள்! சொல்லடுக்குவோர்க்குத் தெரியாது, இந்தச் சுந்தரனின் காவிய ஓசைகள்!

பாடலாசிரியரும்...

கவிதை ஏடுகளைத் தருபவன் மண்டை ஓடுகளுக்குள் கிடக்கிறான்.

கால வெள்ளத்தை வெல்பவன், கண்ணீர் வெள்ளத்துக்குள் அமிழ்கிறான்!

முத்துக் கவிதைகளின் சொந்தக்காரன் வாழ்க்கை, கொத்திப்பிடுங்கும் கழுகுகளுக்கிடையே வளைகிறது!

வானையும் நிலவையும்காட்டும் அவன் வாழ்க்கைக்குச் சோறையும் நீரையும் காட்டுவாரில்லை!

குயிலும் குழலும் ஒலிக்கின்றன, அவன் கவிதையிலே; புயலும் ஏழ்மையும் துளைக்கின்றன அவன் வாழ்க்கையிலே!

ஆமாம்! அவன் தெருப்புழுதியிலே கிடக்கும் நறுமலர்; தரையிலே கரைகின்ற வெண்ணெய்; காட்டிலே எறியும் நிலவு; பாட்டிலே திரியும் வறுமையின் வளைவு!

செத்தபின் மணிமண்டபம் கட்டும் இத்தரையிலேதான் அவனும் வாழ்கிறான். ஆமாம்! மனிதகுல மாணிக்கம் கோலோச்சும் நகரிலேதான், அவனும் திரிகிறான்.

அவனுக்குக் கவிதை, காதலி! அவன் அதைக் காதலிக்கும் நேரத்தில் வேறு வேலைகளை மேற்கொண்டிருந்தால் வாழ்க்கை, பூங்காவாகியிருக்கும்; பொழிலாகத் திகழ்ந்திருக்கும்; தேன் மழையாக இனித்திருக்கும். ஆனால், கவிதையைக் காதலித்துத் தொலைத்தான்; கவலைகளைத் தானே அணைத்துக் கொண்டான்.

முன்பின் தெரியாதவர்கட்கெல்லாம், பொன்னாடை பூட்டி மகிழும் தில்லி, அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆயிரம் செய்திகளை அலறும் வானொலி, அவனது செந்தேன் இதழ்வடித்த கலைமழையைக் கேட்கவில்லை. செத்துப் போனவர்களுக்கு மலர்மாலை சூட்டும் ஏடுகளும், செத்துக் கொண்டிருக்கும் அவன் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை.

மாங்குயில் கூவியும் தீங்குழல் இசைத்தும், அவை ஏரியில் பெய்த மழையாகவே போய்விட்டன. பொருளற்ற சொற்களை அடுக்குகின்ற வார்த்தை விளையாட்டுக்காரர்களுக்கு வரவேற்புகள்; மகரதோரணங்கள்! ஆனால் சொல்லெல்லாம் தேனாக இனிக்க, நாளெல்லாம் இதயத்தின் கவிதை முழக்கும் அவன் வாழ்வில் ஏழ்மை கை கொட்டியாடுகிறது.

தாகூர் எனும் பூங்குயில் பிறந்த நூற்றாண்டை வருமாண்டில் கொண்டாடப்படுகிறதாம், தில்லிக்கொற்றம்!

வழுத்தும் பாடல்களை எழுதிய காலிப் பிறந்த நூற்றாண்டை இன்னும் இரண்டாண்டுகளில் கொண்டாடப் போகின்றனராம்!

ஆகா! செத்தவர்களுக்கென்று எத்தனை சிங்கார மாளிகைகள்! ஆனால் வாழ்பவர்களுக்கு மட்டும் ஏன் இந்த ஓலைக்குடிசைகள்?

இத்துணைச் சிக்கல்களும் எவன் வாழ்வில் வருகின்றன? இந்த வினாவுக்கு விடையிதோ!

இரண்டாண்டுகளுக்குமுன் தில்லியின் தெருக்களில் ஏதேனும் பாதை இடையூறு ஏற்பட்டால், அது ஒருவேளை அவன் ஓட்டிவந்த மாட்டுவண்டியால் நேர்ந்திருக்கலாம். மின்னல் வேகத்தில் விரைகின்ற மோட்டார் வண்டிக்காரர்கள், கண்களைப் பாதி மூடிக்கொண்டு சிந்தனையோடு குறுக்கே வந்துவிட்ட அந்த மாட்டு வண்டிக்காரனைப்பாத்துக் கேட்பர்: "ஏ மூடமே! நீ வண்டி ஓட்டுகிறாயா? கவிதை புனைகிறாயா? சிந்தனையிலிருக்கும் பெரிய கவிஞர் போலல்லவா, ஐயா வருகிறார்!"

இம்... அவர்களுக்கென்ன தெரியும்? அவன் குப்பை வண்டிக்காரன் மட்டுமல்ல; குப்பையிலே கிடக்கும் கவிதை மணியும் ஆவான் என்பது எவருக்குந் தெரியவில்லை!

இனி அவன் இதழ்மொழிகளையே கேளுங்கள்: "கவிதை எனக்குத் தொழிலில்லை; காதலி! அவள்எனக்குச் சூட்டிய பட்டப்பெயர், கிறுக்கன்! என் தாய் தந்தையர் எனக்குச் சூட்டிய பெயர் பிக்ர்நாட்வி! உருதுவின் இலாகவம் எனக்குத் தெரியும். பாரசீகமும் அராபியமும் என்னிதழில் விளையாடுகின்றன. இம்மூன்று மொழிகளிலும் முத்துக் கவிதைவரிகள் ஓரிலட்சத்திற்கு மேல் பாடியிருக்கிறேன். ஆனால் இதழிலேதான் கவிதை மகளின் களியாட்டம்; நெஞ்சிலே வறுமைத்தேளின் வெறியாட்டம்.

எழுதி முடித்தவற்றை, நூல் வெளியீட்டாளர்களிடம் தூக்கிச் சென்றேன், அவர்களோ ஏழையின் கையிலிருந்த முத்துக் குவியலைக் கவனிக்கவில்லை; தந்தப் பேழைகளிலே வந்த கண்ணாடித் துண்டுகளுக்கு வெளிச்சம் போட்டார்கள். புலவனென்றால் அவனுக்கிரண்டு கொம்புமுளைத்திருக்கவேண்டும் போலும்! எனக்குக் கொம்பும் இல்லை; ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளும் தெம்பும் இல்லை.

நான் தில்லி மாநகராட்சி மன்ற ஊழியன் என்பதுதான் உங்கட்குத்தெரியுமே! என்மீது இரக்கம் கொண்டோ, ஏனோ, தில்லிமாநகராட்சியினர், அங்கு வருகின்ற வெளிநாட்டுப் பெரிய மனிதர்களின்முன் வரவேற்புப்பாப் பாடும் வாய்ப்பை அளித்தனர். சௌஎன்லாய், குருச்சேவ், புல்கானின், ஈரானியமன்னர், சௌதி அரேபியாவின் காவலர் ஆகியோர்க்குத் தில்லி மாநகராட்சியினர் அளித்த வரவேற்புக்களிலெல்லாம், நான் வரவேற்புப்பாடல்கள் பாடினேன்; தேன்மழையில் நனைந்தனர் திரண்டிருந்தோர். ஆனால் அவர்கள் வாய் உதிர்த்த வார்த்தைகள், என் நெஞ்சை நிரப்பின. வயிறை நிரப்ப ஒன்றுமேஇல்லை!

நான்கைந்து பெரிய மனிதர்கள் என்பாட்டைக் கேட்டுக் கைதட்டியதும் வந்தது வினை, 'இவ்வளவு பாராட்டுக்குரியவன் அலைவதோ, வண்டிக்காரனாய்? சே! அது மாநகராட்சியின் மரியாதைக்குக் களங்கமாயிற்றே!' என்று எண்ணினர் அவர்கள். அதனால் தான் 'இன்று முதல் நீ குப்பைவண்டியோட்டியில்லை: தோட்டக்காரன்!' என்றனர். பதவி மாறினால், கௌரவம் காக்கப்பட்டுவிடுமாம்! நல்ல கௌரமய்யா, நல்ல கௌரவம்! கௌரவமான தோட்டக்காரனானதால் என் சம்பளம் உயர்ந்ததா? இருந்தபடியே இருந்திருந்தாலும் மகிழ்ந்திருப்பேன். ஆனால் வண்டியோட்டியபோது கிடைத்த ஊதியமும் குறைந்தது!

அந்த மூன்று மொழிகளிலும் பட்டங்கள் பெற்றிருக்கிறேன். ஆனாலும் என் வாழ்வில் அமைதியில்லை! என் குழந்தைகளைச் சாதாரணப் படிப்புக்கு அனுப்பக்கூட வழியில்லை!

நான் பணியாற்றும் தோட்டத்தில் அன்றாடம் அல்லியும் முல்லையும் தாமரையும் இருவாட்சியும் மலர்கின்றன; வளர்கின்றன! ஆனால், நான் நடத்தும் குடும்பத்தில் வறுமையும் நோயும்தாம் வளர்கின்றன; துளைக்கின்றன. எனக்கு இருமல் என் குழந்தைகளுக்கு எலும்பு நோய்!

நான் அம்மூன்று மொழிகளைப் படிப்பதற்கே மாதந்தோறும் செலவழித்த தொகை அதிகம். ஆனால் எனக்கு தில்லி மாநகராட்சியினர் தரும் அருட்கொடையோ மாதத்திற்கு அறுபத்தைந்து ரூபாய்! என்ன செய்வீர்கள். நீங்கள் இந்த நிலையில் இருந்தால்?

ஆயிரம் கவிதைகளை முழங்கிய என் இதழ், இதை எடுத்துச் சொல்லவும் வழியற்று மூடிக் கிடந்தது. என் நிலை கண்ட அருணா ஆசப் அலி அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுபத்ரா சோசி, இராதாராமன், அகமத் அலி ஆகியோரும் பிற உள்ளூர்த் தலைவர்களும் வேறு பல இயக்கத்தவர்களும் எனக்காகக் குரல் எழுப்பினர்; தில்லிமாநகரத்தந்தையிடம் மனு ஒன்றையும் தந்தனர். நேரு பெருமகனார் நிவாரண நிதியிலிருந்து ஏதேனும் தந்துதவ வேண்டினர். ஆனாலும் பயன் இல்லை! மனு தூங்குகிறது! மனம்மட்டும் பொங்குகிறது! என்ன செய்வேன்? எவர் துணை புரிவார்? வெடிக்கின்ற வினாவுக்கும், துன்பம் வடிக்கின்ற கண்ணீருக்கும் பதில் சொல்வாரில்லை!

சாகித்ய அகாடமியின் தலைவர் நேரு. அவர் திருப்பார்வைகூட, ஏழை எழுத்தாளர்கள் மீது விழவில்லை. நான் 'காந்தி. காந்தி!' என்று பாடியிருந்தால், ஒருவேளை என் நிலை உயர்ந்திருக்கும்! நான்தான் உயிரைப் பறிகொடுத்தேனே. இயற்கையிடம்! இன்னும் கொஞ்ச நாளில் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிடுவேன்! அப்போதாகிலும் அரசினர் பார்வை குளிராதா? செத்த பின்தானே சோசப் இவர்கள் கண்ணீரைப் பெறுகிறான்!

வாழும்போது காலை வாரிவிடுவோர், செத்தபின் மணிமண்டபம் கட்டும் நாடு இது!

நான் இனி யாரிடமும் குறையிரக்கப் போவதில்லை. ஆனால் நாட்டு நிலைமை இப்படி இருக்கிறது என்பதைமட்டும் சொல்லிவிட்டேன்!"

ஃ ஃ ஃ

இதயம் திறந்து காட்டியிருக்கிறான் இப்படி அந்த எளியவன், ஓர் வடநாட்டாசிரியரிடம்! அதை அவர் தன் கட்டுரையில் குறித்துக் காட்டிச் சென்றிருக்கிறார். நீதியைச் சொல்லுங்கள்! அவன் செல்ல வேண்டிய வாழ்க்கை வீதியைக் காட்டுங்கள்! அப்படியாகிலும், அவன் பிழைக்கிறானா என்று பார்ப்போம்!

—மதுரையான்.

...பள்ளியாசிரியரும்.

அண்மையில் கருடாழ்வார் காக்காரியாரும் அறிஞர் அண்ணா அவர்களும் சென்னை எழும்பூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விடுதி நாள் விழாவில் ஒன்றாகப் பேசினர்.

ஆசிரியத் தொழில் பார்க்கும் படித்தவர்களின் நிலை பரிதாபமாக உள்ளதைச் சுட்டிக்காட்டிய அண்ணா அவர்கள், எடுத்துக் காட்டாகத் தான் கண்ட நிகழ்ச்சி யொன்றைக் கூறினார்கள்.

"நான் ஒரு கிராமத்தில் உள்ள ஆரம்ப பள்ளிக்கூடத்துக்குப் போனேன். ஆசிரியர் அங்கு இல்லை. அவர் எங்கே என்று கேட்டேன். அந்த ஆசிரியர் பால்வியாபாரம் செய்கிறவாராம்.

"பாலகாரரைக் கேட்கிறீர்களா?' என்று என்னிடம் அவர்கள் கேட்டார்கள். பால் விற்கும் நிலையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்."

அண்ணா சொன்னதை அமைச்சர் மறுத்துப் பேசியிருக்கிறார். "படித்தவர்கள் யாரும் அந்த நிலையில் இல்லை!" என்றாராம்; மறுத்தாராம்.

அமைச்சரே! அமைச்சரே! அந்த ஆசிரியர் நிலையாகிலும் தேவலை என்று சொல்வது போலப் பல நிகழ்ச்சிகள் அங்கங்கே தெரிகின்றன!

பம்பாய்ப்பால் கடை ஒன்றில் பணியாற்றி உழல்கிறான், ஒரு பாவலன்!

தில்லியிலே வாழும் மற்றொருவன் சுந்தரக் கவிஞன்; அவன் புழுவாய் அலைகிறான்.

அமைச்சரே! அவனது வாழ்க்கையைப் படியுங்கள்! அப்போதாவது படித்தவன் துன்பப் படுகிறான் என்று உங்கள் உள்ளம் உணரும்!

இளமை :

"நினைவுகள் அத்தனையும் அப்படியே செயல்பட்டு விடுவதில்லை.

பெய்கின்ற மழை எல்லாம் பேராருக ஓடி அலைகடலைத் தழுவிவிடுவதில்லை, சில பகுதியில் பெய்கின்ற மழைத் துளிகள் அங்கேயே சார்ந்துவிடுகின்றன. வேறு சில பகுதியில் விழுந்த துளிகள் ஓடைகளாக ஓடிக் குளங்களிலேயே நின்றுவிடுகின்றன. இவற்றிற்கெல்லாம் தப்பித்த துளிகள்தான் ஒன்று கூடிப் பேராருகி, விரைந்தோடிக் கடலலைகளை முத்தமிடுகின்றன.

நாம் நினைக்கிறோம், ஒரு பெரிய செயலைச் செய்து முடித்துவிட. ஆனுல் எத்தனை இடையூறுகள் ? பாசம் காட்ட வேண்டியோர்கூட, பகையைக் கக்குகின்றனர். குமரனும் சோமாவதியும் மணந்துகொள்வதால் இரண்டு சிக்கல்கள் ஒழிகின்றன. முதலாக சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே உள்ள வெறுப்பு மாய்கிறது. அடுத்து, மாளிகைக்கும் மண் குடிசைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வு நொறுங்குகிறது. இந்த நல்ல காட்சிகளைக் காண்பதற்கு நாம் எத்தனை துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறோம்? போகட்டும் !

இந்த இடம் அவர்கட்குத் தெரிந்துவிட்டதால் நாம் உடனே வேறிடம் பார்க்க வேண்டியிருக்கிறது. அனுராதபுரத்துக் குணதிலகே அமரசேனேயைக் காண வருகிருனும். அதற்குள் சோமாவதி அங்கே இருக்க வேண்டுமாம். இதற்காகக் காடுமேடெல்லாம் வலை போட்டலசுகின்றனர். இனி நீங்கள் தப்ப, இலங்கையின் எல்லையைக் கடந்தே ஆக வேண்டும் ! அல்லற்படுவோனை 'வா ! வா !' என்றழைக்கின்றது அலைக்கைகளை நீட்டி, நீலக்கடல் ! தமிழகத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் பேர் அலைந்து வந்திருக்கின்றனர் இங்கு, இந்த நீலக் கடலினலைகளைக் கண்டு. ஆனுல் அவர்களோ, அவர்கள் வழி வந்த நாமோ காணமுடியவில்லை அமைதியை, இங்கே. இப்போது, அமைதியைக் காண்பதற்கும், பாதுகாப்பைத் தேடுவதற்கும் நீங்கள் தமிழகத்தின் கரையை நாடி ஓட வேண்டியிருக்கிறது !

பிறந்த மண்ணை விட்டுப் பிரியச் சொல்கின்றனர், இந்தக் காடையர்கள். என்ன உங்கள் கருத்து ?" என்று கேட்டான் மாறநம்பி.

"பெற்ற தாயை இழந்துவிட்டேன், பிறந்த அன்றே ! அடைந்த காதலனையாகிலும் இழக்காதிருக்க விரும்புகிறேன். அதற்காக எங்கும் செல்வேன்! மனித இதயத்தில் வாழ்வதைத்தான் விரும்புகிறேன், உடன் பிறந்தான் என்ற பெயரில் உலவும் விலங்கோடு வாழ்வதைவிட !" என்ருள் சோமாவதி.

★

படகு ஊர்ந்து அலைந்து விரைந்தது. அவர்களைப் படகேற்றி அனுப்புவதற்காக அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஒன்றில்லை; இரண்டில்லை, கழுகுச் சிங்களவர்களின் விழிகளில் மண்ணைத் தூவிவிட்டு, அவர்களைக் படகில் ஏற்றிவிட அவன் அவர்களைப் போலவே பழிவாங்கப்பட்ட தமிழருள் ஒருவரான பொன்னழகரிடம்நிலைமையை விளக்கி அவர் படகைக் கேட்டான். அப்படிப் படகு போனுல் திரும்பி வரப் போவதில்லை என்பது பொன்னழகருக்குத் தெரியும். ஆனுலும் அந்த நெய்தல் நிலத்தலைவர் துணிந்து தந்தார். "உச்சிப்புளியில் குறிப்பிட்ட ஓரிடத்தில் மறைத்து வைத்துச் செல்லுங்கள். நான் அங்கு வரும்போது படகைத் திருப்பிக்கொண்டு வருகிறேன்" என்று சொன்னுர். அதன்படியே செய்ய ஒப்பிப் படகில் ஏறினர் இருவரும். படகு சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்த மாறநம்பி தனக்குள் சொல்லிக்கொண்டான், "படகைச் செலுத்துவதுபோலவே வாழ்க்கையும் துன்பமானதுதான் !" என்று. படகு, கோழியாகிக் குருவியாகி, நெல்லிக்கனியாகிக் கடுகாகிக் கடைசியில் கண்ணுக்குத் தெரியாது மறைந்தபின் தான் அவன் கரையை விட்டு நகர்ந்தான். கவிந்த இருளில் கடற்கரையில் அவன் சென்ற தோற்றம்; அடிபட்ட மான் தள்ளாடித் தள்ளாடி ஊர்வதைப் போல் இருந்தது. மாறநம்பிக்கும் குமரனுக்கும் உள்ள உறவு என்ன ? யாருக்கும் தெரியாது ! சோமாவதிக்கும் மாறநம்பிக்கும் எப்படி அறிமுகம் ? காக்கை குருவிக்குக்கூடத் தெரியாது. ஆனுலும் ஊராருக்குத் தெரியாத உறவுமுறை ஒன்று, அவர்கள் துன்பங்களில் மாறநம்பியையும் பங்கெடுத்துக் கொள்ளச் செய்தது. அவர்கள் பிரிவைத் தாங்காது துடிக்கும் இதயத்துடன் அவன் கரையேறினுன்.

★

கரையேறிய அவர்கள் மிகுந்த வேதனையுடன்தான் ஊர்ந்தார்கள். குமரன்தோளில் சாய்ந்துவந்த குமரி, இப்போது அவன் மடியில் கிடக்கிருள். தமிழகத்தின் இனிய காற்று அவளைப் பார்த்து வரவேற்றுத் தழுவியது. அதேநேரத்தில்தான் அவள் உயிர் தன் பொறுப்பைக் கை கழுவிக் கொண்டது. அலறித் துடித்த குமரனுக்குக் கடல் அலைகளால் கூட ஆறுதல் சொல்ல முடியவில்லை ! "ஐயோ ! உன்னைக் கொல்வதற்கா இந்தக் கரைக்கு ஏந்தி வந்தோம் !" என்றலறின, அலைகள்.

திகைத்து நின்ற அவன் தோள்மீது ஒருகை விழுந்தது. தாய் நாட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவன், கவிழ்ந்து கிடந்த வைகறைப் பொழுதின் அடிவானத்தையே பார்த்துக்கொண்டிருந்த அவன், திரும்பினுன். சிலை அசைந்தது என்றுதான் எண்ணினர் அவனைத் திருப்பி விட்டோர். அவன் பார்வையில் மறுபடியும் பட்டது சோமாவதியின் பிணம். "ஐயோ ! அம்மா !" -இந்த அலறல் அவன் தொண்டையையும் அதைக் கவ்வியிருந்த சோகத்தையும் கிழித்துக் கொண்டு கிளம்பியது !

ஆறுதல் கூற வந்தவர்களுக்கு, சிலையாக அவன் நின்ற நிலையும், அழுது கொண்டிருந்த குழந்தை, விழுந்து கிடந்த சோமாவதியின் பிணம் ஆகியவையும் நடந்த கதையைச் சொல்லிவிட்டன. அவனுக்கு ஆறுதல் சொல்லி அழைத்தனர்.

'-தம்பீ ! தம்பீ ! நீ யாரோ ?யாராய் இருந்தால்தானென்ன ? இன்னும் இங்கே காத்து நிற்பது தவறு ! எங்களை ஒரு கொள்ளைப் படகு துரத்தி வருகிறது இன்னும் சிறிது நேரம் நின்ருல், இருக்கும் நாமும் இறக்க வேண்டியதுதான். ஓடிவா ! ஓடிவா ! போய்ப்பிழைப்போம் !" என்ருன் ஒரு முதியவன்.

"ஓடிப்பேவதா ? போய்ப் பிழைப்பதா ? யாருக்காக ஓடிப்போய்ப்பிழைப்பது ? நான் ஏன் ஓடவேண்டும் ?" என்ருன் குமரன் !

"தம்பி ! இறந்துவிட்டவளுக்காக அல்ல; உன்னை நம்பிப் பிறந்துவிட்ட இவளுக்காக ஓடவேண்டும்; ஓடிப் போய்ப் பிழைக்கவேண்டும் ! இந்தப் புதிய உயிருக்கு உள்ள ஒரே நம்பிக்கை நீதானே ? இல்லையா ?"

கிழவன் கேட்டான். குமரன் திகைத்தான். அடுத்தகனம் ஓடினுன் "ஆம்! ஆம் !" என்றவாறே.

எவ்வளவு தொலைவு ஓடினரோ ? எவ்வளவு தூரம் வேகமாய் நடந்தனரோ ? தெரியாது ! ஒரு நெடுஞ்சாலை குறுக்கிட்டபோதுதான் அவர்கள் நின்றனர்.

அவனது கதையைக் கேட்ட அந்த முதியவரான முத்து வீரப்பர் ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தார். "நாங்களும் தான் ஈழத்தீவில் உலவினுேம். நாவாயோட்டி நளியிருமுன்னீர் கடந்துஅன்று சென்ருேம், வணிகத்திற்கு. படகு செலுத்தித் தப்பித்து வந்தோம்இன்று, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள. எப்படியோ தாய் நிலத்தை மிதித்து விட்டோம். எடுத்துச்சென்றதை எல்லாம் இழந்துவிட்டு ஒட்டாண்டிகளாய்த் திரும்பும் எங்களையும் கொள்ளையடிக்க வந்தனர் படகொன்றில் சில கொள்ளைக் காரர்கள். தப்பித்துப் பிழைத்தோம். தமிழன் தனது புகழையையும் மறத்தையும் நிலைநாட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது இன்று. மண்ணுள்வோர் என்ன செய்யப் போகின்றனரோ ?"

முத்து வீரப்பர் இதைச் சொல்லி முடித்துக் குமரன் கையிலிருந்த பசலையைப்பெற்று உச்சி மோந்தார்.

"தம்பீ ! நான் வணிகத்திற்கென்று எடுத்துச் சென்ற பொருள்கள் போக மீதி அனைத்தும் தொண்டியிலேயிருக்கின்றன. அவற்றை வைத்து ஏழுதலை முறைக்குப் பிழைக்கலாம்! நீ என்னுேடு வா. எனக்கும் வேறுயாரும் இல்லை ! இந்தச் சிரிக்கும் பசலைக்கு என் அன்பை பொழியும் வாய்ப்பைத்தா !" என்ருர், முத்துவீரப்பர். உடன் இருந்த மருதவாணனும் அவர் கருத்தை ஆமோதித்தான்.

வானத்தையே வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்த குமரனின் இதழ்கள் முனு முனுத்தன; "இனி எனக்கு நம்பிக்கையில்லை. நீண்ட கடற்பயணமே, என் சோமாவின் வாழ்க்கைப் பயணத்தை முடித்து விட்டது. நான் இனி என் பயணத்தை ஏன் தொடர வேண்டும் ? பெரியவரே ! வீணுன நப்பாசைகளை மூட்டாதீர்கள் !"

"தம்பி ! நீகணையடிபட்ட புரு; கல்லடிபட்ட கனி; வெம்புகிருய் ! இயல்புதான் அது. ஆனுலும் உன்னுல் ஈழத்தில் இன்று தலைகுனிந்த தமிழ்ச் சமுதாயம், நாளையதினம் நல்ல ஒரு பொழுதைச் சந்திக்க விருக்கிறது ! அதனுல்தான் உன்னை வற்புறுத்துகிறேன் !" என்ருர் முத்துவீரப்பர். உடன் இருந்தவர்களும் அவனை வற்புறுத்தினர். அவன் சிந்தித்தான்; தெளிவு பிறக்கவில்லை.

"தொண்டி போய்ச்சேர்ந்ததும் என் முடிவைச் சொல்கிறேன். முதலில் தனியாக விடப்பட்டுவந்த என் காதலியை எடுத்துவந்து அடக்கம் செய்ய வேண்டும். அதைச் செய்த பின்னரே, மற்ற எதையும் என்னுல் சிந்திக்கமுடியும் !" என்ருன் அவன்.

முத்து வீரப்பர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பக்கத்துப் பேருருக்கு முத்து வீரப்பர் சென்று தனக்குத் தெரிந்த வணிகர் ஒருவரிடம் வெண்புரவிகள பூட்டிய தேர் ஒன்றைப்பெற்று வந்தார். குழந்தையை அங்கேயே பால் தந்து காக்கும்படி தம் நண்பர் ஒருவர் வீட்டில் விட்டு வந்தார். முத்து வீரப்பர் ஊருக்குள் வந்ததும் திரும்புவது ஊராருக்கு வருத்தமென்ருலும், அவர்கள் மேற்கொண்டிருந்த செயலலையறிந்து விடை கொடுத்தனர். துணைக்குச் சிலரைப் படைக் கருவிகளுடன் அனுப்பிலர்.

எல்லோரும் கூடிப் புறப்பட்டபோது கதிரவன் உச்சியைத் தாண்டிவிட்டான். புரவிகள் பறந்தன; விரைந்தன. நொடிப்பொழுதில் அவர்கள் கடற்கரையை அடைந்தனர். தேரை விட்டிறங்கி ஓடினுன் அவன். கால்களில் எப்படித்தான் அந்தப் பலம் வந்ததோ ? அவன் கால்கள் எப்படித்தான் அந்த மணலின் சூட்டைத் தாங்கிக் கொண்டனவோ ? அவன் காதலி பிணமாகி, சிதைந்த கனவாகி, அழிந்த ஆசையாகிக் கிடந்த இடத்திற்கே ஓடினுன். அவன் இதயம் எப்படி வெடித்துப் போகாமல் இருந்தது ? அதை அவன் எப்படிப்பொறுத்துக்கொண்டான் ? வேறு என்னதான் செய்யமுடியும் அவனுல் ! சோமாவதியின் பிணம் அந்த இடத்தில் காணப்படவில்லை. அதை அவன் எப்படியும் பொறுத்துக்கொண்டால்தானே, அவள் அளித்த அன்புக்கனியைக் காக்க முடியும் ?

எந்தக் காதலியின் பிணத்தை எடுத்துச்சென்று அடக்கம் செய்ய வேண்டுமென்று ஓடி வந்தானே, அந்தக் காதலியின் பினத்தைக் காணவேகாணுேம் !

கடைசியில், அவளுக்குக் கல்லறை கட்டி, அந்தக்கல்லறையில் முட்டி மோதித் தன் சோகத்தைச் சொல்லிப் புலம்பக்கூட வாய்ப்பில்லை !

சோர்ந்த மனத்துடன் அவன்திரும்புகையில், வழியில் ஒரு செம்படவக்

★ மா.பாண்டியன் ★

கூட்டம் வந்தது. அவர்களைக் கண்டதும் அவன் துடிப்புடன் கேட்டான்.

"ஐயா! இங்கு ஒரு பெண்ணின் பிணத்தைப் பார்த்தீர்களா?" என்ருன்.

அவர்கள் அஞ்சி நடுங்கியவாறே. "நீங்கள் யார்?" என்றனர்.

"காலையில் என்மனைவி இங்கே இறந்து விட்டாள். அவளை இங்கேயே போட்டுவிட்டு அடக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துவரப் பக்கத்து ஊருக்குச் சென்றேன். இப்போது திரும்பிவந்தால், பிணத்தைக்காணேம்! எங்கே அவள்? நீங்கள் கண்டீர்களா?" என்ருன்.

"மன்னிக்க வேண்டும் ஐயா! நாங்கள் காலையில் இந்தவழி வந்தபோது ஒரு சிங்களப் பெண்ணின் பிணத்தைக் கண்டோம். கண்டதும், 'யாரோ? கரையிலேயே இப்பிணம் கிடந்தால் என்னென்ன வம்பு வருமோ?' என்றஞ்சித் தூக்கிச் சென்று எரித்து விட்டோம்! மன்னியுங்கள், ஐயா! வம்பு ஏதும் வரக்கூடாது என்பதற்காகத்தான் எரித்து விட்டாம்!" என்ருன்.

"எங்கே? சுடுகாடு எங்கே?" என்ருன் குமரன்.

செம்படவப் பெரியவர் காட்டிய வழியில் ஓடினுன். சுடுகாட்டில் அவன் ஆசையின் முழு உருவமும் எரிந்து அணைந்து கொண்டிருந்தது.

"ஐயா! என் ஆசையெல்லாம்இறுதியில் ஒருபிடிச் சாம்பலானதே!" என்றலறி மயங்கி வீழ்ந்தான்.

ஆமாம்! அழுகின்ற நெஞ்சம் பொழிகின்ற கண்ணீர் கூட, இனி அந்த ஆசையின் வார்ப்படத்தைத் தூக்கி நிறுத்த முடியாது! காலம் பலவாய்ச் செழித்து வளர்ந்த பருவப் பயிர், கடைசியில் ஒருதுண்டு நெருப்புக்கிரையாகி விட்டதே!

★

அனுராதபுரத்துக் குணதிலகே வல்லமையின் ஓருரு. துட்டகமுனுவின் கொட்டங்களுக்கெல்லாம் துணைபோனவன். துட்டகமுனு பதவியேற்றதும் தன் பக்கம் நின்றவர்களுக்கெல்லாம் பதவிகளும் கோட்டைகளும் தந்தது போலவே, குணதிலகேயும் பதவி அளிக்கப்பட்டான். விற்படைக்குத் தலைவனுன அவன் ஆதிக்கம், அரண்மனையில் உயர்ந்து கிடந்தது. துட்டகமுனுவின் ஆட்சிக் கொடி பறந்த இடமெல்லாம், அவனது குரலும் அதிகாரம் செலுத்தியது. குணதிலகேயின் நட்பைப் பெற்றுக்கொண்டவர்கள், தங்கள் செயல்களுக்குத் தடைகளைக் கண்டது கிடையாது.

வசதியான வாழ்க்கை அவன் உடலை வளர்த்து விட்டிருந்தது. வழக்கமாகச் சிங்களவெறி அவன் கண்களில்கொதித்துக் கொண்டிருந்தது. மதகரி போல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான்.

"சிங்களச் சமுதாயமே காணுத பேரழகி என்று வருணிக்கின்றனர், அவளைப்பார்த்தவர்கள். காணுத கண்ணும் உயிரும் அவளை எழுதி எழுதிப் பார்த்துக் கொள்கின்றன. பேரழகி என்கின்றனர். அதைபற்றி எல்லாம் எனக்குக் கவலையில்லை. என்னை ஒரு முறை பார்த்தால் போதும்; அவள் தன்னை அப்படியே மறந்து விடுவாள்! என்னழகிற்காகவோ, அவள் அழகிற்காகவோ நான் இந்த ஏற்பாட்டை மேற்கொள்ளவில்லை.

நான் அவளிடத்து அக்கறை காட்டுவதெல்லாம்..." எண்ண அலைகளில் மிதந்துகொண்டிருந்த குணதிலகே எழுந்து உட்கார்ந்தான், எதிரே அமரசேனே வந்து நிற்பதைப் பார்த்து!

"எப்போது வந்தீர்கள்? திடீரென்று வந்துவிட்டீர்களே!" என்ருன் குணதிலகே!

"விரைந்து வர வேண்டியிருந்தது! அதனுல்தான் ஓடி வந்தேன்" என்ருன் அமரசேனே.

"ஏனே?"

"தாங்கள் நாளை மாலை எங்கள் கோட்டைக்கு வருவதாகச் சொல்லியிருந்தீர்கள். ஆனுல் எங்கள் அரண்மனையில் ஏற்பட்ட இடையூறு ஒன்ருல், உங்களைக் கோலாகலமாக வரவேற்க முடியாதிருக்கிரேம்! தாங்கள் இன்னும் சில நாட்கள் கழித்து வந்தால் நல்லது!"

"சோறு சூடாயிருந்தால், ஒரு சில விநாடிகள் பொறுக்கலாம். ஆறட்டும் ஆறட்டும் என்று நெடு நேரம் பொறுத்திருந்தால் ஆவதென்ன? சோறின் சுவையல்லவா வீணுகிவிடும்!

மலர்ந்தபின் முகரச் சொல்கிறீர்கள். நல்லதுதான். ஆனுல் எத்தனை நாளைக்கு 'பூ மலரவில்லை! பூ மலரவில்லை!' என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது? 'பூ மலரவில்லை!' என்று ஏமாற்றிக்கொண்டே கிடந்தால், அது வாடி வதங்கிவிடும். பின் நாம் அழுகலைத்தான் சந்திக்க வேண்டியிருக்கும். அதுபோல்தான் நம் நிலையும். உம் அரண்மனை வண்ணப் பூங்கா என்று நீரே சொன்னீர். நானும் நம்பினேன்; வரத் துடித்தேன்! ஆனுல் ஆசைகாட்டிய நீரே, வரும்போதெல்லாம், 'வராதே! வராதே! என்று விரட்டுகிறீர்! ஏன்? ஏன்? என்மேல் அவநம்பிக்கை ஏதும் தோன்றிவிட்டதா, உம் நெஞ்சில்?

"அப்படி எல்லாம் இல்லை. அவளுக்கு உடல் நலம் குறைந்து விட்டது. இந்த நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்தால், அவளைப்பற்றிய தவருன மதிப்பீடு ஏற்பட்டுவிடும். மலர்ந்த மல்லிகையானுலும், தளர்ந்த நிலையில் காண்பது சரியல்ல! இல்லையா, தலைவரே?"

'நீர் சொல்வதும் சரிதான். ஆனுலும் குணதிலகேயின் விழிகள் எதையும் எந்த நிலையிலும் தெளிவாக எடைபோடக்கூடியன. அது உமக்கே தெரியும். அமரசேனே! தைத்த விழி தைத்ததுதான்; வைத்த குறி வைத்ததுதான். அணுவும், தவருது குணதிலகேயின் மதிப்பீடு! இவ்வளவும் உமக்குத் தெரியும். என்ருலும் என்னை நம்ப மறுக்கிறீர்! இல்லையா?'

"ஐயையோ! தங்கள் நெஞ்சிலா இந்த அவநம்பிக்கை? என்னை நீங்கள் இதுவரை பெருமைப்படுத்தி வந்திருக்கிறீர்கள், உங்கள் நட்பின் மூலம்! நிலை இப்படி இருக்க, உங்கள் நம்பிக்கையையா, நசிக்க வைப்பேன்?'

"எப்படியும் நான் நாளை இங்கிருந்து புறப்பட்டு நாளை மறுநாள் உங்கள் கோட்டை வாயிலை அடைவேன். எனக்குள்ள பல அலுவல்களில் இதற்குரிய நாளை நான் இனியும் தள்ளிப் போட விரும்பவில்லை. காலம் கடந்து கொண்டே போனுல் என் வாழ்வும் நகர்ந்து கொண்டே போக வேண்டியதுதான்! உரிய காலத்தில் பருவத்தைச் சுவைக்கத் தவறியவன், அது சரியத் தொடங்கியபின் வருந்திப் பயனில்லை! இல்லையா, அமரசேனே?'

"எனக்காக இந்த ஒரு முறை பொறுத்திருங்கள் இன்னும் ஒரு கிழமைக்குள் எப்படியும், உடல் நலமானதும், உங்களை நானே வந்து அழைத்துச் சென்று எல்லாம் செய்கிறேன்!"

"முடியாது! முடியாது! நான் இனியும் என் திட்டத்தை மாற்றிக் கொள்ளமுடியாது. மாற்றிக்கொள்வதென்ருல். புறப்படும் நாளை மாற்றிக் கொள்ளமாட்டேன்; போகும் இடத்தைத்தான் மாற்றிக்கொள்வேன்! தெரிகிறதா, அமரசேனே!"

அமரசேனேயின் இதயம் துவண்டது. ஆயிரம் எதிரிகளின் போர்க் குரலைக் கேட்டும் அஞ்சாத சேனேயின் உடம்பு, இடத்தை மாற்றிக்கொள்வேன் என்று குணதிலகே சொன்னதைக் கேட்டதும் நடுங்கிற்று; மயங்கிற்று; அழிந்தது! ஆம்! அவன் எதிர்பார்த்த அத்தனையும்-ஒளி மிக்க எதிர்காலத்தை வகுத்துத் தரும் அத்தனையும், குணதிலகேயின் வருகையில் தாம் இருக்கின்றன. அவனே இப்போது சேனேயின் கனவு மாளிகையை நொறுக்குவதென்ருல், இடித்துத் தூள் தூளாக்குவதென்ருல் அது, தாங்கிக்கொள்ளக் கூடிய துயரம் இல்லைதான்! ஏமாற்றத்தால் நிலையாக நிற்கமுடியாது போன சேனே பக்கத்திலிருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டு சாய்ந்தான்.

அப்போது குதிரை ஒன்று விரைந்து வரும் ஓசை கேட்டது. நாற்காலியில் சாய்ந்த அமரசேனே, விரைந்து எழுந்தான்; சாளரத்தின் வழி பார்த்தான்.

தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு மாளிகையின் வாசலை நோக்கிநடந்தான். குதிரை மறவன், குதிரையை விட்டிறங்கியதும் அமர சேனேக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, அவனை நெருங்கிக், காதோடு ஏதோ சொன்னுன்.

"அப்பாடா!" என்ற பெருமூச்சு அவன் இதழில்! ஆயிரம் ஒளிக்கற்றைகள் அவன் முகத்தில்!

அம்புபோல் விரைந்தான், குணதிலகேயிடம்.

"எனக்கு இப்போது கோடி நம்பிக்கை பிறந்து விட்டது! நீங்கள் திட்டமிட்டபடி எங்கள் நாட்டுக்கு வரலாம்!" என்ருன் அமரசேனே!

அத்தனை நேரமும் மறுத்துக்கொண்டிருந்தவன், திடீரென்று வரவேற்புப் படித்தநாள் அயர்ந்து நின்ருன், குணதிலகே!!

[தொடரும்]

என் தாய்

(11)

தென்றலோடு கதை பேசிய கன்னிவாழை - குமரியாகிறது; குமரிவாழை குழந்தை பெறுகிறது-அதன் வாழ்வு முடிகிறது-இது இயற்கை!

காக்கையின் கூட்டில் குயில் முட்டை இடுகிறது. அதன் தாய்மை வேலை அத்தோடு சரி.

தேளும் நண்டும் அவை பெற்ற செல்வங்களுக்காக அவைகளையே சிதைத்துக்கொள்வதைக் காண்கிறேம். தியாகம் என்று அதைச் சொல்வதில்லை இயற்கை!

"ங்ங்ஙா...ஙா..." குழந்தையின் முதல் குரல் ஒருத்தியைத் தாயாக்குகிறது! காதலன் மீதிருந்த கவர்ச்சி குழந்தைமீது திரும்புகிறது. மனிதனின கவர்ச்சியே அப்படித்தான். அடிக்கடி மாறும!

குழந்தை வளர்கிறது.குழந்தைக்காக வேம்பைக் கரும்பாகக் கருதுகிருள் தாய்! உணவு உறக்கம் ஒழிக்கிருள். குழந்தைக்காக இவள் மருந்துண்கிருள். இதனுல் தாய் பெரியவளா...இல்லை. இது அவள் கடமை; இயற்கை! இதில் புகழும் வண்ணம் எதுவுமே இல்லை! பறவை உலகம் பதில்சொல்லும்!

சிலர் உரோசாமலர்-அதாவது மலடி! காய்க்காத ரோஜாவிற்கு மதிப்புண்டு. ஆனுல்...பெண்ணிற்கு! சமூகமும், அவள் கணவனும், போட்டிக்கு வரும் இன்னொரு பெண்ணும-அவளைக் குழந்தையின்மீது பாசத்தை உடையவளாக செய்கின்றனர்! ஊரார் குழந்தையை நேசிக்கிருள்-கொஞ்சுகிருள். ஆனுல் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் வேற்றுமை பாராட்டுகிறது தாய் மனமாகுமா...எது பெண்மனம! பெண்மை உண்மை! தாய்மைகற்பனை!

இன்னொரு வகை:

குழந்தை பிறக்கிறது. பால் கொடுக்க வேறு ஆள் - பாதுகாக்க வேறு ஆள்! அவள் பெயர் தாதி. பெற்றவள் பெயர், அன்னை! விதவைத்தாய்-கருவை அழிக்கும் கன்னித்தாய்-விற்பனை செய்யும் தாய் - ரயிலிலும் குளத்திலும் வீசிஎறியுமதாய் பலவகை உண்டு.

இதுவரை பொது!

இனி என்தாய் பற்றி: அவள் இருக்கிருள் - நானும் இருக்கிறேன். அவளைத் தாய் என்று நான் எண்ணுவதிலலை. என்னையும மகன் என்று அவள் எண்ணமாட்டாள். காரணம்...

நான் பிறந்த ஓராண்டுக்குப் பிறகு வளர்ந்த இடம் வேறு - வளர்த்தவர்கள் வேறு. இதுதான்! இடையிலே பலமுறை சந்தித்ததுண்டு; ஆனுல் "தாய்-மகன்" தோன்றியதிலலை. என்னைப் பெறறவளை நான் தாய் என்று எண்ணுவதில்லை. ஆனுல் வளர்த்தவளை என்தாய் என்று எண்ணுகிறேன். வேடிக்கை இதுவல்ல! என்னை வளர்த்தவள் என்னைத் தன்மகனுக எண்ணுவதில்லை! ஆமாம் தாய் அங்கும் இல்லை. இதுதான் நான-என்தாய். சூன்யம! சூன்யத்தில ஒரு தத்துவம! மனநூலும் என் மனமும் பெற்ற குழந்தை அது!

பெண்மையின் முடிவு தாய்மை! ஆனுல் தாய்மை பெண்மையல்ல. தாய்க்குத் தரும் உயாவு-பெருமை-சிறப்பு-கற்பனையானது. அவசியமற்றது தாய்மையும் காதலைப்போல ஒரு பசியே! பசி புனிதமானதல்ல. உண்மையானது! இயற்கையானது!

பிறந்த குழந்தையைத் தாய் அறியாமல் மாற்றிவிட்டால். வேற்றுக் குழந்தையையும தன் குழந்தையாகத் தாய் கருதுகிருள். பாசம்-இரத்தத் தொடர்புடையது அல்ல. மனப்பான்மையை பொறுத்தது! வாழ்வின் நோக்கம் வேறொரு வாழ்வை துவக்குவது-உண்டாக்குவது இது இயற்கை! புனிதமானதல்ல!

உலகத்துக் குழந்தையெல்லாம் தன்னுடையது என்று எண்ணுபவள் தாய்! அப்படிப்பட்டவள் வாழ்க! இருந்தாள். ஆனுல் அவள் இல்லை.

இது என் தத்துவக்குழந்தை! அதன் தாய்-நான்!

—இசையபுது.

கல்லூரிக் கவியரங்கம்

3. எழில்.

இன்பவெழில் நீயன்னை ! நேச னிருப் பறைவாய் !
துன்ப மதைச் சீக்குந் தொழுபடைநீ ! — அன்புறுநல்
லுன்ற னெழிலுருவை யுள்ளபடி யானிசைக்க
வென்றன் கருத்தை இயக்கு !

இயக்கு மாட்சி இயல்புடைத் தாகி இங்கு மங்கு மெங்குநி றைந்தே,
வியக்கும் வண்ணம் கவின்மிகு காட்சி, வளர்க்கு முன்ற னின்றிற லென்னே !
மயக்கும் வகையை நான்மொழி வேனே ! மொழியி னிசையார் புலவரி னுள்ளம்
பயக்குறு மாறே பற்பல வைப்பிற் படிந்தி லங்கு முன்னழ கென்ன !

காலை வெய்யோன் கடன்மிசைத் தேன்றுங் காலை யுன்ற னுருவினைக் கண்டும்
மாலை செய்யோன் மலைமிசை யாங்கே மங்கு லுடன்று னசைவது கண்டும்
சோலை புள்ளி னிசையொலி கேட்டுச் செவியி லின்பஞ் சேர்ந்திடப் பெற்றோர்
நூலை யிங்கே பலப்பல வாக நொடியி லார்த்தார் நயமறிந் தோரே !

வான ணைந்த நீள்வரை யுச்சி ; வழிந்திறங்கு மருவியி னோதை;
கான ணைந்த சாரலிற் றேன்றுங் கரிகளேபல பிடியுட னுடும்;
தேன ணைந்த கூட்டரு கேகித் துதைந்து கீழ தோடவுஞ் சாடும் !
யான ணைந்தன னுன்னரு கேயோர் யாழி னொலியை எழுப்புக நீயே !

அன்று நானொரு சோலைபு குந்தே னரச வாழ்வுடைச் சாலைய றிந்தேன்;
நின்று நாண்மல ரின்னியம் போலே ஞிமிறினம்பல முரல்வது கண்டேன்;
குன்ற மார்ந்திடுங் கவினுடைத் தென்றற் குலவு மம்மலர் விருந்தினை யுண்டேன் !
அன்றி லோடுவெண் ணன்னமு மில்லை யாண்டு மறைத்தா யென்னெழிற் செல்வீ?

நீல மஞ்ஞையி னுட்டமுங் கண்டேன்; நெடிய நேரமா யெனையும றந்தேன்.
ஆல மரந்தனி லாங்கிரும் புட்க ளமன்ற நற்கவின் காட்சியே ஆ ! ஆ !
கோல மிகுந்த வந்நறுங் காட்சி கூற வற்றோ யுன்னெழிற் சாயல் !
கால மலர்ந்த செங்கனி யுண்டு கூடி பன்னிய மிசைத்தன புட்கள் !

கீத மிசைக்குங் குயிலின் குரலில், தாளம் நல்கும் கிளியின் குரலில்,
நாத மிகுந்த் நல்லிசை யெழுப்பும் நல்லிளங் காதற் புட்களின் குரலில்
காதன் மிகுந்த விளஞ்சிறு கன்னி கொவ்வையி தழ்வழி வந்திடுங் குரலில்
மாத ரிசைக்கும் வீணையி னொலியில் மாண்ட வுன்றனி ருக்கைநான் கண்டேன் !

மங்கு றங்கிய மலைகளி லுன்றன் மாட்சி தங்கும் மயக்குறு வாட்சி;
பொங்கும் வெள்ளிய அலைமிகு வாரிப் பொலியு முன்ற னருந்திற லாட்சி;
கங்கு லார்ந்த போதிலும் நீயே, காரிருள் வானத் திலங்கிடு வாயே !
எங்கு முன்ற னெழிலினைக் கண்டோ ரெய்தும கிழ்வே யாதெனச் சொல்வேன் ?

வயல்களி லேயுன் வண்மையைக் கண்டார் வேலையின் வந்த களைப்பினைநீத்தார்
முயன்றுமுன் னேறும் பள்ளுழ வோர்தான் முனைத லின்றியு னுருவினைக்காத்தார்!
கயல்கட்பி றழ்ச்சியிற் குவளையின் பூவில், காம ருறைந்திடுந் தாமரை நாவில்,
இயலிசைக் கூத்தி னினிமைமுத் தமிழி லியங்கு முனளியினை யாமுங்கண்டோமே!

வேறு

இத்திறம் வாய்த்தவு னிணையடி வழுத்துவம்
சத்தினை யுணர்த்துவாய் சகப்பொரு ளனைத்தும்
பரம்பொருட் புரைந்து நற்பயனுற விளங்கி
வரம்பிலா மகிழ்வினை வழங்குவாய் நின்வழி
நிற்பவர் தத்தம் நிறைவினை யெய்துவர் !
வெற்பிலும் வளியிலும் பொற்பிலும் பொருளிலும்
கற்பவர் நெஞ்சகக் களியிறு நினைவிலும்
பெட்புற வேநீ பொலிந்திலங் கிடுவாய் !
நட்பிலே தவழ்ந்திடு மனமா சகற்றுவாய் ?
சேர்ந்துவாழ் வோர்க்கே செம்மைவாழ் வளிப்பாய் !
ஆர்ந்துகா னனைத்து மகற்றியே தனித்துக்
கானிடை யுழன்றுங் காசினி வெறுத்தும்
ஆனிரை பாலொடு மருட்பூ ணுதே
தனியவர் வாழ்விலோர் தகைமையு மளிக்கலை !
கனிச்சுவை பெற்றோர் கவினுருப் பெற்றோர்;
மனித்தவாழ் வுற்றோர் நின்வழி நின்றோர் !
நின்னுட னியைந்துநாம் நல்லருட்
பொன்னுடற் பெற்றே பொலிந்திலங் குவமே !

—சா. ப. சபாரத்தினம்.

★

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தோழர் இவர். பெயர் சபாரத்தினம். புனைபெயர் அவைமணி.

★

மறுப்பு

விடுதலையின் பித்தலாட்டம்

'விடுதலை' (சென்னை 8-3-60ந் தேதி 4-ம் பக்கம் முதற்பத்தி)யில் 'கண்ணீர்த்துளிகளின் காலித்தனம்' என்கின்ற தலைப்பில் வெளியாகி யிருக்கின்ற செய்தி கண்டு திடுக்கிட்டேன்! 'தி. மு. கழகத்திற்கு **எப்படியாவது** கெட்ட பெயர் வாங்கித்தர வேண்டும்' என்கின்ற ஒரே நோக்கத்திற்காகவே 'விடுதலை' நடத்தப்படுகிறதோ எனவும் ஐயுற்றேன் !

நான் அடித்ததாகக் கூறப்படும் நண்பர், அவர் பணிபுரிகின்ற பள்ளியிலும், பள்ளியைச் சேர்ந்த பகுதியிலும் மிகக் கேவலமாகவும், அருவருப்பாகவும் நடந்துகொண்டதோடு, பெண்களால் காறி உமிழத் தக்க நிலைக்கு ஆளான நேரத்தில். நான் அவரை அழைத்துக் கண்டித்துப் பேசி அனுப்பினேன். என்ன காரணத்தினாலோ திராவிடர் கழகத்திற்கு முரணான கொள்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற அவர் 'திடீரெ'ன விடுதலைக்கு நல்லவராகக் காட்சி தந்திருப்பதைக் கண்டு வியப்படைகிறேன் !

இழிசெயல் புரிபவனுக்கு வக்காலத்து வாங்கவந்த விடுதலை, "அடித்ததாகத் தெரிகிறது" என்று உண்மையில்லாத செய்தியை, தெளிவில்லாத-தெரியாத செய்தியை. மஞ்சள் பத்திரிகை பாணியில் வெவியிட்டதைப் பார்த்துப் பெரிதும் வருந்துகிறேன்.

அந்தோ! விடுதலையே ! இனியேனும் முடிவாகவும் உண்மையாக வும் தெளிவாகவும் தெரிந்த செய்தியைப் பிரசுரிப்பாயா ?

அ. மாணிக்கம்,
புதுக்கோட்டை.

அன்று பொய்யும் வாயுமாய்ப் புறப்பட்டவர், இன்று கையும் களவுமாய்ப் பிடிபடுகிறுர் !

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எந்தவகையிலும்இணையிட்டுக் காட்டுவதற்கு இலாயக்கற்றவர்களாக இருக்கும் சிவஞானக் கட்சிக்காரர்களை எண்ணிப்பார்த்தால், அவர்களின் ஏயாளித்தன்மைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன சில மாதங்களுக்கு முன்பிருந்தேவடக்கெல்லைக் கிளர்ச்சிப் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டதாகவும், அதற்காகச் சில இடங்களில் விழா நடத்தி வீரம் பேசிக்கொண்டதாகவும், தங்களைத் தாங்களே பாராட்டிக்கொண்ட இந்தக் கேவலக் காட்சியில் தமிழ் நாட்டிலேயுள்ள மற்றவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லையென்று வேதனைப்படுவதாகவும், இப்போது செய்திகள் அதிகமாக வெளிவந்துள்ளன. திருத்தணி வீரர்களின் தலைவர் சிவஞானம் என்று இன்று பட்டம் சூட்டிக்கொள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்பதை ஆறு ஆண்டுகளுக்குமுன்பே சிவஞானக் கட்சியின் தொண்டர் ஒருவர் 'பேரிகை' ஆசிரியருக்குத் தெரிவித்துவிட்டார். அந்தச் செய்திகள் வெளிவந்த நேரத்தில் தேள் கொட்டிய திருடரைப்போல், திருதிருவென விழித்துக் கொண்டிருந்தார் சிவஞானம்! பேரிகையாருக்கு நன்றி கூறிவிட்டு அந்தச் செய்திகளை மீண்டும் படித்துப் பார்ப்போம். ''தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் தம் பெயரை வெளியிட வேண்டாமென்று கூறி, மிஸ்டர் மாநிலம் மேலிடத்தாருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலைக் கொடுத்திருக்கிறுர். சித்தூர்க்கிளர்ச்சி தம்முடையதுதான் என மார்தட்டிப் பேசிய மாநிலம் இப்போது இக்கிளர்ச்சிக்கும் தமக்கும் சம்பந்தமில்லையென மேலிடத்துக்கு இக்கடிதத்தை எழுதியிருக்கிறுர்....

காரியங்களையெல்லாம் தம்முடையதென்றே சொல்லிப் பிழைத்துக் கொள்வது வழக்கம். அவைகளிலே ஒன்றுதான் சித்தூர்க் கிளர்ச்சியும் சிவஞானத்தின் சிலம்பாட்டமும்! சிவஞான மேதை பேசுவதைப் பாருங்கள் - ''செப்டம்பர் மாதம் எழுதிய கடிதத்துக்கு இப்போதுதான் பதில் எழுதுவதற்கு, என் வீட்டில் ஏற்பட்ட ஒரு அசௌகரியமே காரணம். இந்தி எதிர்ப்புப் போராட்டம், சித்தூர்க்கிளர்ச்சி முதலியவை பற்றித் தாங்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு என் பதிலைக் கீழே மிகப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். **சித்தூர்க் கிளர்ச்சியை நடத்தும் நேரடிப் பொறுப்பைத் தமிழ் அரசுக்கழகம் ஏற்கவில்லை. வடக்கு எல்லைப் பாதுகாப்புக் கமிட்டி தான் அதை நடத்தியது.** இது சம்பந்தமாகச் சில விஷயங்களைக் கூறவேண்டும். 'சுயராஜ்யம்' வந்ததும் ஆந்திரர்கள் செய்த கிளர்ச்சிக்காகத்தமிழர்களும் தங்களது வடக்கு எல்லையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள். 1948-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எல்லைக் கமிட்டியென ஒரு கமிட்டியை காலஞ்சென்ற சி. என். முத்துரங்க முதலியார் தலைமையில் நிறுவியது. இந்தக் கமிட்டியின் ஒரு கிளையாகத்தான் வடக்கு எல்லைப் பாதுகாப்புக் கமிட்டி ஏற்பட்டது. மற்றபடி தமிழ் அரசுக் கழகத்தின் கிளையல்ல. 1953-ல் நீதிபதி வாஞ்சு சென்னைக்கு வந்திருந்தபோது தமிழ்நாடு பிரகவலைப்படவும் காரணமில்லை. அரசியலில் அவர்கள் தேய்ந்து போன இலாடங்கள்! ஆனுல் தலைவர் முதற்கொண்டு இராசகுமாரி வேடம் போட்டு ஆட்டம் காட்டிய வீர மங்கைகள்வரை நாடக மேடையை மறந்துவிட்டுத் திட்டித் தீர்க்க வந்துள்ளார்களே - அவர்களுடைய கொள்கைச் சேதிகள் ஒழுங்கானவைகளா என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இழி செயல்களைத் தொகுத்துக் காட்டுகிறேம். ''தமிழ் அரசுக் கழகம் ஹிந்தியைத் தேசிய பாஷையாக ஒப்புக்கொண்டிருக்கிறது. கழகம் என்ற சொல் தமிழில் சங்கம் எனப்படும். ஆனுல் துரதிர்ஷ்ட வசமாகத் திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இதைச் சேர்த்துத் தப்பார்த்தம் செய்துகொள்ளுகிறுர்கள். அதனுல் தமிழரசுக் கழகம் போன்ற பழைய ஸ்தாபனங்கள் இக்குழப்பத்தில் மாட்ட வேண்டி ஏற்படுகிறது. ஹிந்தியை எதிர்த்து வருவன திராவிடக் கழகங்கள்தானே ஒழியத் தமிழ் அரசுக் கழகமல்ல. எந்த நாளிலும் அது எதிர்க்கவில்லை. ஹிந்தியை ஆதரித்து 5-6-53-ல் கூட ஹிந்திப் பிரச்சார சபையின் ஆதரவில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறேன். இப்பிரசங்கம் செங்கோலில் வந்திருக்கிறது. இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டுமென ஹிருதயப் பூர்வமாக நினைக்கிற நான், ஹிந்தியின் அவசியத்தை ஒருபோதும் எதிர்க்கமாட்டேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி செல்லுமிடமெங்கும் கேவலச் சொல் புகல்கின்ற சிவஞானம் தனக்குள்ள சின்னத்தனப் புத்தியை ஏன் மாற்றிக்கொள்ளவில்லை? சாதாரணக் காங்கிரசுக்காரனுக இருந்த காலத்தில் பேசுவது போலவே 'தலைவர்' என்று தம் பெருமை பேசும்போதுகூடவா மறக்காமல் இருக்க வேண்டும்! கட்சியை விட்டுக் 'கல்தா' கொடுக்கப் போகிறேம் என்று சொன்னவுடன் எத்தனை பொய்களைச் சொல்லியிருக்கிறுர் சிவஞானக் கிராமணி என்பதை அவருடைய சீடர்கள் சிந்தித்துக் காண வேண்டும். சித்தூர்க் கிளர்ச்சிக்கும் தமிழ் அரசுக் கழகத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்று தலைவரே சொல்லியிருக்கும்போது. புதுத் தொண்டர்கள் விழாக் கொண்டாடுவதில் விவேகம் உண்டா? ''தமிழரசுக் கழகத்தின் சாதனை அல்ல அது என் தனிப்பட்ட நடவடிக்கை!'' என்றெல்லாம் சிவஞானம் காங்கிரசுத் தலைவருக்கு எழுதி அனுப்பியிருக்கிறுர்-அன்று. அதை எல்லாம் மறந்து இன்றைய தினம் விழா நடத்தும் வெட்கங்கெட்ட நிலைமை அந்தத் தலைவருக்குப் பழக்கப்பட்டதாக இருக்கலாம். கழகத்தின் வருங்கால வாரிசுகளாக இருக்கும் சீடர்கள் தங்களின் தன்மானத்தையும் கொஞ்சம் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? அந்த விந்தை மனிதரின் பின்னுலே ஒரு மனித மந்தையா? ''மாநிலத்தின் முகமூடி கிழிகிறது. தமிழ் அரசுத் தொண்டர்களே! உங்கள் தலைவரின் மாய்மாலத்தைப் பாருங்கள். சித்தூர்க்கிளர்ச்சி உங்களுக்குச் சம்பந்தமில்லையாம்-மேலிடத்தாருக்கு எழுதின பல்டிக் கடிதத்தைப் பாருங்கள்.

பதவிக்காசைப்பட்டதால் மதிப்பிழந்து யார் யாரையோ உதவிக்கழைத்த பரிதாபம் !

....இந்தத் தில்லுமுல்லு பல்டியைக் கண்டு மனமுடைந்து போன அந்த மாஜி மாநில நண்பர் இக்கடிதத்தை நமமிடம் தந்ததோடு இனிமேல் அந்தக் கழகத்துடன் எந்த விதமான தொடர்பும் இல்லாதபடி அறுத்துக்கொண்டுவிட்டார். அந்த நண்பரின் வேண்டுகோளின்படி அவர் பெயரை வெளியிடாதவாறு கடிதத்தைக் கீழே பிரசுரித்து, நமது கருத்தையும் கூறியிருக்கிறேம். இக்கடிதத்தை மாநிலம் மறுக்கமுடியாதெனக் கூறுகிறேம். வேண்டுமானுல் 'மாநிலம்' அக்கடிதத்தை அப்படியே பிரசுரிக்கட்டும்.''-இந்த முன்னுரைக்குப் பிறகு சிவஞானக் கட்சிககாரர்களைத் தெருவில் தலை தூக்கி நடக்கமுடியாமல் செய்த கடிதத்தின் செய்திகள் வெளியிடப் பட்டிருந்தன, 1-1-54 இதழில்! அந்த நாட்களில் இதனை மறுததுக் கூற அவ்வைகளாகிய ஆரணங்குகள் இல்லை! இருந்த வானம்பாடிகள் கூட வாயைஇறுகமூடிக்கொண்டன. கவிக்குயில் தனது எருமைக்குரல் நண்பரின் ஏட்டைக் கடன் வாங்கி இன்று எழுதுவதுபோல அன்று எந்த மறுப்பும் தரவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் சிவஞானச் சீடர்களுக்கு சிறிய அளவுக்குக்கூட அரசியலறிவு உண்டென்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இதற்கு எண்ணற்ற சான்றுகளைக் கடந்தகால நடவடிக்கைகள் வைத்துக்கொண்டுள்ளன. சிவஞானக் கம்பெனியார் தங்களுடைய செயல்முறைகளுக்கு அப்பாற்பட்ட

தேசக் காங்கிரஸ் கமிட்டி ஒரு உபகமிட்டியைப் போட்டு வடக்கு எல்லைப் பாதுகாப்புப் பிரச்சாரம் செய்யவும் கிளர்ச்சி நடத்தவும் மக்களைத் தூண்டியது. ஆகவே **சித்தூர்ப் போராட்டத்திற்கும் தமிழ் அரசுக் கழகத்துக்கும் சம்பந்தம் இல்லை. சித்தூருக்கு வெளியேதான், தமிழ் அரசுக் கழகம். இக்கிளர்ச்சிக்குத் தம் ஆத்மீக ஆதரவை அளித்தது. 144 தடையுத்தரவை மீறியதற்காக நான் சித்தூர்க்கிளர்ச்சியில் கைதானது உண்மை. ஆனுல் அப்போதிருந்த நிலையில் என் நடத்தையில் இது ஏற்பட்டது. இது எனது தனிப்பட்ட நடவடிக்கை. கழகத்தின் சாதனை அல்ல.** காங்கிரஸ் சட்டசபைக் கட்சி இதற்காக என்மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதெனக் கேட்டது. நான் கொடுத்த சமாதானத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது. சித்தூர்க் கிளர்ச்சியின்போது சிலர் ரயிலைநிறுத்தியதும், தண்டவாளத்தில் படுத்துத் தொல்லை கொடுத்ததும் உண்மைதான். ஆனுல் இதற்குத் தமிழரசுக் கழகமோ வடக்கு எல்லைப் பாதுகாப்புக் கமிட்டியோ காரணமல்ல.' -கடிதம் இப்படிச் செல்கிறது. வட எல்லையை மீட்டியவர்கள் நாங்களே என்று நாப்பறையடிக்கும் நண்பர்களே! உங்கள் தலைவர் சிவஞானம் சொன்னதைக் கேட்டதுண்டா?

திராவிட முன்னேற்றக் கழகம் சிவஞானங்களைக் கண்டிக்கவும்

ஹிந்தி பொது மொழியாகும் அரசியலமைப்பை நான் ஆதரிக்கிறேன். 1948-ல் கல்வி மந்திரியாக இருந்த ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் ஹிந்தியைக்கட்டாயப்பாடமாகக் கொண்டு வந்தார். ஏற்கனவே இங்கிலீஷ் என்ற அந்நிய மொழியைப் படிக்கிற மாணவர்களுக்கு ஹிந்தியும் சேர பாரமாக இருக்கும். தாய் மொழியைப் படிக்க அவர்களுக்கு அவகாசம் இருக்காதென நினைக்கப் பட்டது. ஆகவே கட்டாயப் பாடமாக இல்லாமல் இஷ்டப் பாடமாகவே இருக்காலாமென முதலில் சர்க்கார் போட்ட உத்திரவுதான் சரியென்றும், அந்த மாதிரி இஷ்டப் பாடம் வேண்டுமெனவும் தமிழ் அரசுக் கழகம் நினைத்தது. **இதை மந்திரியிடம் பேட்டிகண்டு சொன்னேம். இந்த மாதிரி யோசனை சொன்னதைத் தவிர, தமிழ் அரசுக் கழகம் சர்க்காருக்கு விரோதமாக எந்தக் கிளர்ச்சியையும் நடத்தவோ, அல்லது எக்கிளர்ச்சியிலும் கலந்து கொள்ளவோ இல்லை.** எனது இந்த சமாதானங்கள் காங்கிரஸ் பிரஸிடெண்டுக்குத் திருப்தியளிக்குமென நம்புகிறேன். நான் ராஜாஜி மந்திரி சபையை ஆதரிப்பதால சில காங்கிரஸ்காரர்கள் என்மீது இந்த மாதிரி வஞ்சம் தீர்க்க முயலுகிறுர்கள. உங்கள் கீழ்ப் படிதலுள்ள, ம. பொ. சிவஞானம்.'' மிஸ்டர் மாநிலத்தின் முகமூடியைக் கிழித்த கடிதத்தின் நகல் இது. உங்கள் தீர்ப்பு என்ன?

தண்டாமுண்டாக் கழகத்தலைமைக்கு மறுக்க முடியுமா எனச் சவால் விடுகிறேம்!''—இப்படியெல்லாம் கேட்டபோது எந்த விளக்கமும் மறுப்புரையும் தராத தலைவரும் அவர்தம் தாசர்களும் இன்றையதினம் தங்களது திசையை வேறுபக்கம் வைத்துக் கொள்ளத் துடிக்கிறுர்கள்! இந்தியை எதிர்க்கத் துணிவில்லாமல் தலையிலே துணி போட்டுக்கொண்டு தங்களை மறைத்துக்கொண்டவர்கள்-காங்கிரசுத் தலைவரிடத்திலே தாள் பணிந்த தலைவர் சிவஞானங்கள் - முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டுவதே என் வேலை என்று புறப்படுவது சரியா? தீயவர்கள் விழியாலே மொழி பேசப் பழலாமா? கழகம் என்ற சொல் தமிழில் சங்கம் எனப்படுமாம்! சிலம்புச் செல்வனின் செல்லரித்த மூளை இப்படியெல்லாம் விளக்கம் சொல்லியிருக்கிறது! உண்மையானுல், ''தமிழ் அரசுச் சங்கம்'' என்று பெயர் வைத்துக் கொள்வதுதானே அறிவுடைமைக் கழகு! 'கழகம்' என்று சொல்லி வடநாட்டவரின் 'கங்காணி' ஆனது ஏன்? ''பிழைக்க வேறொரு வழியுமின்றி தி. கழகத்தைத் துவக்கினுர்''- என்று ஒரு முன்னுள் தோழரே சொல்கிறுர். அவர் கடிதம் அடுத்து வரும்.

கூடலரசன்

நூல் நயம்

—செல்லையா—

திருவள்ளுவர் திருஉருவப் பட வெளியீட்டு விழாச் சிறப்பு மலர்.

வான்புகழ் பெற்ற வள்ளுவன் உலகையே அளந்துகாட்டினன், சொல்லின்மூலம். வேணுகோபாலர் அவரையே வரைந்து காட்டினர், கோலின்மூலம். அந்த வேணு கோபாலரின் அரிய முயற்சியைப் பலரும் பாராட்டினர் தம் நெஞ்சார, அத்தனை மொழிகளையும் தொகுத்துத் தந்திருக்கிறார்கள் தோழர்கள். வாழ்த்து மொழிகளும், வாழ்த்துரைத்தவர்கள் உருவங்களும் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் சித்திரங்கள் இல்லாவிட்டாலும், கையை வழுக்கும் நல்ல தாளில் பெரு முயற்சியெடுத்துத் திரட்டப் பட்ட வாழ்த்துரைகள் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

தோழர் வேணுகோபாலர் வள்ளுவர் படத்தைவெளியிட்டதன்மூலம் தில்லியின் ஆணவம் தளர்ந்துவிட்டதைக் காட்டினார். இந்த மலரை வெளியிட்டதன்மூலம், இத்தனைநாள் பலரது நெஞ்சங்களுக்குள் பதுங்கிக்கிடந்த எண்ணங்களையும் இழுத்து வெளியில் வைத்திருக்கிறார்.

“எவ்வளவோ வடநாட்டுக் கலைஞர்களின் திருவுருவப்படங்கள், நம் தபால் பில்லைகளில் காட்சியளிக்கப் பார்க்கிறோம். அப்படி ஒரு தமிழ்க் கலைஞன் அதாவது, குறிப்பாக வள்ளுவர் பெருமானின் திருவுருவம் அந்தத் தபால் பில்லைகளில் குறிக்கப்பட வில்லையே என்று தமிழ் மக்கள் ஏங்கியதுண்டு!” என்று திரு. சாண்டில்யன் வருந்தியதை, நாம் இந்த மலரின்மூலம் தானே அறியமுடிகிறது. இன்னும் சிலர் நம்பிக்கையற்றுப் புலம்பியிருப்பதும் இம்மலரால் தானே தெரிகிறது! மூன்றே நாட்களில் அச்சிட்டு முடித்ததாகக் கூறியிருக்கின்றார்கள். அடே! அப்பா! மூன்று நாட்களில் இவ்வளவு பெரிய சாதனையா?” என்ற வியப்பு, இருக்கும் சில குறைகளையும் மறக்கடித்துவிடுகிறது. நல்ல முயற்சி! போற்றி மகிழ்வோம!

கிடைக்குமிடம் :

8-9 இராமராவ் தெரு,
நாகேசுவரபுரம்,
சென்னை-4.

விலை ரு. 1-50.

★

தேவாரம்

ஆசிரியர் :
தென்னூர் மு. தருமராசன்.

பல்லவர் ஆட்சி நாளில், சமண, சைவ சமயப் போராட்டங்கள் உச்ச நிலையில் இருந்தன. அந்தச் சிக்கலில் அரசனும் தொல்லையுற்றான்; அவன் படைத் தலைவனும் தொல்லைப்பட்டான்; மற்றவர்களும் தொல்லைப் பட்டார்கள். திருநாவுக்கரசர், கலிப்பகையார், திலவதியார் முதலியோர் அந்தப் போராட்டங்களின்போது அடைந்த உணர்ச்சி மாற்றங்களை, தென்னூ தமிழில், நாடக வடிவில் தருகிறார், தென்னூர் மு. தருமராசன். துடிப்புள்ள இளைஞர் அவர். அவர் சொற்களும் வருணனைகளும் அவரைப் போன்றே உள்ளன. காட்சி அமைப்புக்களும், இடையிடையே பழம் பாடல்களைப் பயன் படுத்தியிருப்பதும் கவர்ச்சியாய் உள்ளன.

மொத்தத்தில், சூழ்ச்சியின் நெளிவுகளைக் காட்டும் சுந்தர ஆடி இது.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்,
சென்னை-1.

விலை ரு 1-25.

★

25,00000 மக்கள் தலைவர்

தொகுத்தவர் : (குரும்பசிட்டி)
இரா. கனகரத்தினம்.

இலங்கையில் வாழும் இருபத்தைந்து இலட்சத் தமிழர்களின் இதயத்தில் வாழும் தலைவர் ஆவார், திரு செல்வநாயகம். தமிழின் உயர்வுக்கும் தமிழர் நல்வாழ்வுக்கும் போராடும் இத்தலைமகனார் 1947 முதல் 1959 வரை ஆற்றிய அருந் தொண்டுகளையும், கூறிய கருத்துக்களையும் தொகுத்துத் தருவது இந்நூல். இளைய ஆசிரியரின் பெரும் முயற்சியால், தாய்த் தமிழகத்திலுள்ளாரும் அவர் பணிகளையும் கொள்கைகளையும் அறியும் வாய்ப்புப் பெற்றுள்ளோம்.

வழிகாட்டும் ஒளிக் கற்றைகள், தோழர் கனகரத்தினத்தின் எழுத்துக்கள்.

கிடைக்குமிடம்:

இரா. கனகரத்தினம்,
கண்டி. இலங்கை

விலை ரு 1.

★

வாழ்வு மலர்ந்தது (நாடகம்)

ஆசிரியர் : இரா. தயாநிதி.

தோழர் தயாநிதியின் இரண்டாவது படையல் இது. இந்நாடகத்தில் “கற்பை இழந்து கதறிடும் மங்கையர்களையோ, கற்பைச் சூறையாடி அடுத்தவர் வாழ்வைக் கெடுப்பதே தன் வாழ்வு என்று சூழ்ச்சி வலை பின்னும் வில்லனையோ, வழக்கு மன்றக் காட்சி, கொலை, கொள்ளை போன்ற நிகழ்ச்சிகளையோ, நீங்கள் எதிர்பார்க்க முடியாது.” ஆனால் கதைச் சுவையையும் கவரும் உரையாடல்களையும் காணமுடியும்.

விலை கொடுத்து வாங்குவதற்கேற்ற இந்நூல், நாட்டின் நிலை கூறும் திறன் உள்ள நாடகக் காவியம்!

வெளியிட்டோர் :

மூவேந்தர் பதிப்பகம்,
காரைக்குடி.

விலை ரு 1-80.

★

12 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி

(ஒரு விமர்சனம்)

ஆசிரியர் : மாஜினி.

தனக்கென ஒரு தனி நடை வகுத்துக்கொண்டு, தமிழகத்திற்கு அறிமுகமானவரும், பொதுவுடைமையருமான தோழர் மாஜினி அவர்கள், தமக்கென ஓர் அரசாங்கம் அமைத்துக்கொண்டு இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்டி அலைக்கழிக்கும் காங்கிரசாரை நோக்கித் தொடுத்திருக்கும் கணை, இந்நூல். பன்னூறு செய்திகளைச் சுருங்கத் தொகுத்துச் சுவையுடன் சொல்லும் இந்நூல், எல்லா இயக்கத்தினரும் படிப்பதற்கு உரியது.

காங்கிரசாரின் கயமைகளைக் கூறும் கையடக்கப்பட்டியல், இது.

வெளியிட்டோர் :

மின்னல் பதிப்பகம்,
குருசாமி நாயுடு தெரு,
சென்னை-2.

விலை எட்டணு.

★

இந்திதான் ஆட்சிமொழி!

ஆசிரியர் :
எ. கலைமுகிலன்.

ஒரு சிக்கல் என்றால், அது எழுந்து மாயும்வரை ஆயிரம்பேர் கருத்தைச் சொல்லிச்சொல்லி வருவது வழக்கம். அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகருமல்லவா? அந்த வழியில் மறைமலையடிகள், திரு. வி. க., பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணு, மாம்பலத்துச் சக்கரவர்த்தியார், முதலிய பலர் சொன்ன கருத்துக்களை அடுத்து, நூலாசிரியரும் சில கருத்துக்களை எழுதியிருக்கிறார், இந்தியை எதிர்த்து.

அழகான கருத்துக்களை எழிலான முகப்புடன் தரும் இந்நூலில் விளம்பரங்களும் இருப்பது ஒரு குறை தான்.

வெளியிட்டோர் :

எம். எம். லிங்கம் பதிப்பகம்,
சென்னை-1.

விலை 25 காசு.

தூத்துக்குடியில் காங்கிரசு வெற்றி களங்கமான வெற்றியே

ஆசிரியர் :
எஸ். ஏ. முருகானந்தம்

இந்நூலை ஒரு ஐந்தொகைச் சுவடி என்று சொல்லலாம். தூத்துக்குடி வணிகர் பேச்சு வழக்கில் சொன்னால். நம்மைப்போன்ற அரசியல் வாதிகள் பேச்சில் சொன்னால், ஆதாரங்களுடன் கூடிய மறுப்புச் சுவடி எனலாம். பயனுள்ள இந்நூலில் பக்கங்கள் குறைவு; ஆனால் ஆதாரங்களும் கணைகளும் அதிகம். அண்மையில் நடந்த தூத்துக்குடி இடைத் தேர்தலில் ஆளுங் கட்சியினர் செய்த தவறுகளையும் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு மக்கள் அன்பை வென்ற காட்சிகளையும் தோழர் முருகானந்தம் இந்நூலில் அழகிய முறையில் விளக்கியுள்ளார். எதிர்க் கட்சித் தோழர்கள் எவராயிருந்தாலும் இதைப் படிக்க வேண்டும், வருந் தேர்தலில் காங்கிரசாரின் சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு!

கிடைக்குமிடம் :

நகரக் கம்யூனிஸ்ட் கட்சி,
தூத்துக்குடி.

விலை 25 காசுகள்.

★

திருக்குறள் மன்றச் சிறப்பு மலர்

அரிமழத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் திருக்குறளைப் பரப்பிவரும திருக்குறள மன்றத்தார் வெளியிட்டிருக்கும் இவ்வாண்டு மலரில், வண்ணக் கட்டுரைகள் பலஉள. முயற்சி போற்றற்குரியது!

கிடைக்குமிடம் :

திருக்குறள் மன்றம், அரிமழம்.
விலை இல்லை.

தலைமைக் கழக அறிக்கை-8/60

டெல்லிபாராளுமன்றமேல்சபை(ராஜ்யசபா)த் தேர்தலும், சென்னை சட்டமன்ற மேல்சபைத் (கவுன்சில்) தேர்தலும்

சென்னை சட்டமன்ற உறுப்பினர்களால் சென்னை சட்டமன்ற மேல் சபைக்கு ஏழு உறுப்பினர்களும் டெல்லி பாராளுமன்ற மேல் சபைக்கு ஆறு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல்கள் அண்மையில் நடைபெறவிருக்கின்றன.

சட்ட மன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் சூழ்நிலையில் தலைமைச் செயற்குழுவின் முடிவுக்கிணங்க, சென்னை சட்டமன்ற மேல்சபைத் தேர்தலில் கழகப் பொதுக்குழு உறுப்பினரான தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களை நிறுத்தி வைத்து, கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரவையும் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய ஆதரவையும் பெறுவதென்றும்; டெல்லி பாராளுமன்ற மேல்சபைத் தேர்தலில் போட்டியிடும் கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளர் (அபேட்சகர்) தோழர் பி. இராமமூர்த்தி அவர்களுக்கு கழகத்தின் ஆதரவை அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை-செங்கற்பட்டு-வட ஆற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களால் சென்னை சட்டமன்ற மேல் சபைக்கு நான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் அண்மையில் நடைபெறவிருக்கிறது. கழகத்தினுடைய ஆதரவு கோரித் தேர்தலில் போட்டியிடும் தோழர் ஏ. கே. தங்கவேலர் அவர்களுக்கு, தலைமைச் செயற்குழுவின் முடிவுக்கிணங்கக் கழகத்தின் ஆதரவினைத் தருவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்குத் தக்க ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருமாறு உரிய கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

‘அறிவகம்’ சென்னை-13
16—3—1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்.

**க. பொய்யாமொழி,
கலிங்கம்.**

திசைச் சொற்கள் என்றால் என்ன?

வடமொழிச் சொற்களும் திசைச் சொற்கள்தானே?

வட மொழிச் சொற்களுக்கு ஏன் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது?

விளக்கமான, ஆராய்ச்சிப்பூர்வமான பதில் தேவை?

அயல் மொழிச் சொற்கள் திசைச் சொற்கள் என்பது பல உரையாசிரியர், இக்காலப் புலவர் பலர் கருத்து. ஆனால் அதைச் செந்தமிழ் நாடு அடுத்த கொடுந்தமிழ் நாடு என்றவரும் உண்டு. பின்னதே இரண்டினும் மிகுதி ஏற்புடையது. ஏனெனில்

(1) செந்தமிழ், கொடுந் தமிழ் என்ற வழக்காறு பின்பற்றியே வட வரும் சமஸ்கிருதம், பிராகிருதம் வகுத்தனர். திசைச் சொல்லுக்குச் சரியான சமஸ்கிருதச் சொல் தேசியம (தேசியம்) என்பது மக்கள் வழங்கிய சொல்லை அவர்கள் தேசியம் என்றும், இலக்கிய வழக்கை சமஸ்கிருதம் என்றும் கொண்டனர். தொல்காப்பியர் பகுபாடும் இதுவே இயற் சொல் இலக்கிய வழக்கும் மக்கள் வழக்கும் ஒப்ப உடையது. திசைச் சொல் மக்கள் வழக்கில்மட்டும் உள்ள சொல்லைப் புலவர் தக்க வாய்ப்பறிந்து சிறுபான்மையாகக் கையாளுவது.

(2) தமிழின் நால்வகைச் சொல் கூற வந்த தொல்காப்பியர் பிற மொழிக்கு இலக்கணம் சொல்ல வகை கிடையாது. இயற் சொல் திரி சொல தமிழ்ச் சொற்களே. ஆய்தத்தை எழுத்தோடு எழுத்தாக எண்ணாத தொல்காப்பியர் தமிழ்ச் சொல்லோடு பிறமொழிச் சொல்லை எண்ணியிருக்கமுடியாது.

(3) தொல்காப்பியர் காலத்தில் கீழ் திசையில் தமிழ் தவிர வேறு இலக்கிய இலக்கணமுடைய மொழி கிடையாது.

வடமொழிச் சொற்களும் திசைச் சொற்கள்தானே என்பது திசைச் சொல் மயக்கத்திலிருந்து வந்த மயக்கம். மேற்கூறிய மூன்று காரணங்களுடன் இந்தக் கேள்வியும் திசைச் சொல் விளக்கத்துக்கு நான்காம் காரணம் ஆகும்.

திசைச் சொற்கள் அயற் சொற்களல்ல என்பதுபோலவே, வட சொல்லும் தமிழுக்கு அயலான வேறொரு மொழிச் சொல் ஆக மாட்டாது. பெரும்பாலோர் வட சொல் வடமொழி என்று கூறினாலும் அது பொருந்தாது.

(1) தொல்காப்பியர் வட சொற் கூறினார். வடமொழியன்று.

(2) திசைச் சொல் விளக்கத்துக்குரிய மூன்று விளக்கமும் இங்கும் பொருந்தும்.

கேள்வி எழுப்பியவர் கேள்வியும் வட சொல் வட மொழியன்று என்பதையே சுட்டும்.

(3) சங்க இலக்கிய காலத்திலேயே சமஸ்கிருதம் இலக்கிய மொழியாய் உருவாகவில்லை. தமிழுடன் போட்டியிடுமளவு அது வளர்ந்தது தேவார காலத்துக்குப் பின்னரே.

வட மொழிச் சொற்களுக்கு யாரும் தனியிடம் ஒதுக்கவில்லை. மக்களைச் சுரண்டும் புரோகிதரின் புரோகிதச் சுரண்டலைவிடச் சக்தி வாய்ந்த சுரண்டலாக மொழிச் சுரண்டலை எல்லாநாட்டிலும் புரோகிதர் கையாண்டுள்ளனர். ஆனால் இந்தியாவில் புரோகிதர் இனம்ஒரு பிறவி, புரோகிதம் செய்யாவிட்டாலும் புரோகித வகுப்பாய், பிறப்படிப்படையாக அமைந்தது. அது இந்தியாவின் வட திசைத் தாய் மொழி வாழ்வு முழுதும் கெடுத்து, தென்னகத்தில் மற்ற திராவிட மொழிகளைப் பாதி கெடுத்து, தமிழையும் கெடுக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது.

அதற்காக இலக்கண இலக்கியம், ஆட்சி, பணக்காரர் செல்வாக்கு, பத்திரிகைகள், நிலையங்கள் ஆகியவற்றையும் உலகத் தொடர்புகளையும் பிறநாட்டுச் செல்வாக்குகளையும் வளர்த்து வருகிறது.

★

முத்துச்சோழன், கோவை.

**பாரி பறித்த பறியும்
பழையனூர்க்
காரி அளித்த களைகொட்டும்-
சேரமான்
வாராயோ என்றுரைத்த
வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.**

என்பதாம்.

இவ்வெண்பாவின் ஈற்றடியில் உள்ள எதுகை மேலே உள்ளது போல் ஒன்றி வரவில்லை. ஆக "நீலச் சிற்றாடைக்கு நேர்" என்பதற்குப் பதிலாக "ஈரச் சிற்றாடைக்கு நேர்" என்பதுதான் சாலவும் பொருந்தும் என்பது என் கருத்து. இங்ஙன் யான் கூறும் "ஈரம்" அன்பைப் பற்றி, தங்கள் கருத்தென்ன?

முதல் இரண்டடியும் தனிச் சீரும் ஓர் எதுகை, இறுதி இரண்டடி ஓர் எதுகை என இரு விகற்ப முடன் பிற இலக்கணங்கள் அமைய வரும் வெண்பாவே நேரிசை வெண்பா. நேரிசைக் குறள் வெண்பாவும் இதுபோல ஒரு விகற்பத்தில் அமைவதே. ஆனால் இந்நெறி பிறழில் வெண்பா இன்னிசை வெண்பா ஆகும். இது இடைக்கால (கி. பி. 5-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட) இலக்கணம். சங்க காலத்திலும் திருக்குறட் காலத்திலும் விகற்பக் கட்டுப்பாடு அவ்வளவாக இல்லை என்றே கருத வேண்டும். நாலடி வெண்பாக்களில் இன்னிசை வெண்பாக்களே சில உண்டு. விகற்பமட்டும் மாறியவையும் உண்டு. திருவள்ளுவரின் குறட்பாவில் இரு விகற்பக் குறட்பாக்களும் இடம் பெறுகின்றன.

அன்பர் எடுத்துக் காட்டிய வெண்பா அருந் தமிழ் அவ்வை பாடியதாகத் தனிப் பாடல் திரட்டுத் தருவதே. தனிப் பாடல் திரட்டுப் பொய்யே மிகக்கலந்த கலவை. இந்தப் பாட்டு சங்க கால அவ்வையாரின் மெய்ந் நிகழ்ச்சிகளுடன் விரவியதானாலும், உண்மையில் அவ்வை பாடிய சங்க காலப் பாட்டுத் தானோ என்னவோ, உறுதி கூறுவதற்கில்லை. ஆனால் அழகானதே. சங்க கால அமைப்புக்கு பாட்டு ஒவ்வாததன்று.

முதல் இரண்டடியும் தனிச் சீரும் மட்டுமன்றி மூன்றும் அடியும் ஒத்த எதுகையுடையது. இவ்வெண்பா (பாரி - காரி - சேர- வாரா). நான்காம் அடிமட்டும் பிறிதொரு விகற்பமாகின்றது. இதற்கு வகை செய்வதாக 'இம்மூன்றும்' தனித்து ஓசை பயில்கின்றது.

சங்க கால இன்னிசை வெண்பாக்களும் இரு விகற்பக் குறள் வெண்பாக்களும் பிறவற்றினும் அழகு மிக்கவையாகவே அமைகின்றன. இரு விகற்பமுடைய இந்தச் சிங்கார வெண்பாவின் தன்மையும் அதுவே. முற்கால அவ்வையார் வெண்பாப் பாடியதாகவே தோன்றவில்லை - ஆனால் அழகு வெண்பாக்கள் பாடிய பிற்கால அவ்வையாரின் நறுமணம் அதில் உண்டு. அன்பர் கருதுகிறபடி 'நீல' என்பதை 'ஈர' என்று திருத்தினால் எதுகை சிறிதே திருந்தும்-அழகு மேம்படாது. தவிர, எதுகைக்கே 'நீல' 'ஈர' என்று மாறியபின் நீல-நேர் என்ற மோனை கேட்டுவிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக 'இம்மூன்றும்' என்பதன்பின் 'நீல' சொல்லிலும் பொருளிலும் மட்டுமன்றி, கவிதை உணர்விலும் உயிர்ப்புக்குரிய இடம் பெற்றுவிடுகிறது.

கவிதை இலக்கணத்தின்படி அமைவது. ஆனால் இலக்கணம் கவிதை உண்டுபண்ணமாட்டாது. இலக்கணம் மனிதர் அறிவு தந்த பரிசு. கவிதை இயற்கையின் கலைப் பரிசு.

★

**சி நாராயணசாமி,
செட்டியாபட்டி.**

செய்யுளில் பண்டைய உவமையன்றி வேறு விதமாக இந்நாளுக்கேற்பப்புதிய உவமையைக் கையாளலாமா?

ஆறினகஞ்சி பழங் கஞ்சி. வகையற்றவன்தான் அதைக் குடிப்பான். பண்டைய உவமை கையாண்டவர்கள் செக்குமாட்டுப் போக்கில் சென்ற இடைக் காலப் போலிக் கவிஞர். புதிய உவமைகள்-வெறும் புதுமைகள் அல்ல. பிறருக்குப் புதுமைச் சுவையூட்டும் புது உவமைகள்தான் கவிதையின் உயிர், அதன் இன்றியமையா இலக்கணமே அதுதான.

தம் கேள்வி தென்றலில் இடம் பெற்றதே, தென்றலின் விடியற் போதைக்குரிய விடியலொளி சென்றெட்டா அலையிருள் எங்கோ இன்னும் தேங்கிக் கிடக்கின்றது என்பதன் சின்னம் ஆகும். புதுமையன்றிப் பழமை என்றும் நாடாத தமிழர் பழமை தான் வேண்டும், பிற போலிப் பழமையன்று.

ஆசிரியர்
கண்ணதாசன்
நிகழ்ச்சிகள்

மார்ச் 27 93-94-வது வட்டம்.
,, 28 26-வது வட்டம்.
ஏப்ரல் 1 காட்டூர் (மீஞ்சூர்)
7 சோத்துப்பெரும்பேடு
10 99வது வட்டம் (நாடகம்).
11 87-வது வட்டம்.
12 சாலப்பாக்கம் (உத்திரமேரூர்).
,, 14, ,, 15 மதுரை
,, 17 காஞ்சிபுரம்.
,, 18 60-வது வட்டம்.
,, 20 மீஞ்சூர் (பொன்னேரி வட்டம்)
,, 24 94-வது வட்டம்.
,, 25 விருத்தாசலம்.
,, 26 சிக்கல் (நாகை)
,, 27 கொரடாச்சேரி
,, 29 பொன்னமராவதி.

செழியன் உலா

தென்றலில் முன்னர் ஒருமுறை நெற்களஞ்சியமான மாவட்டத்தைச் சார்ந்த காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் தவருன போக்கினை விரிவாக எழுதியிருந்தோம். ஆனல் அதைப் பற்றிப் பல தவருன மறுப்பறிக்கைகள் தாம் வந்தனவே ஒழிய, உண்மை மறைக்கப்பட்டுவிட்டது. தனது கட்சிக்காரர்கள் தனக்குத் துணையாக இருக்கும் மட்டும் தனக்கு அச்சமில்லை என்ற போக்கில் அவர் போய்க்கொண்டிருக்கிருர். இந்த ஆணவம் நெடுநாட்களுக்கு நிலைக்காதபடி, அவரது கட்சிக்காரர்களே, அந்த எம்.எல்.ஏ. மீது சீறி எழுந்திருக்கின்றனர். அண்மையில் ஒரு மண்டலக் காங்கிரசுக் கமிட்டித் தலைவரே அந்த எம். எல். ஏ. யின் சில திருவிளையாடல்கள் பற்றி முதலமைச்சர்க்கு எழுதிய மடல் ஒன்றின் உண்மைப் பிரதியை (True copy) அடியில் தருகிரேம். கூர்ந்து படியுங்கள்:

"சென்னை அரசாங்க கனம்

முதலமைச்சர் அவர்களுக்கு

ஆயக்காரன்புலம் மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வி. இராசமாணிக்கம் வணக்கமாய் எழுதிக்கொண்டது.

1951-ம் வருசத்தில் .... பிள்ளை தலைவராகவும் குரவப்புலம் எஸ். வைரப்பத்தேவர் காரியதரிசியாகவும் கொண்ட .... பிர்க்கா விவசாயிகள் சங்கம், அமைக்கப்பட்டது. இந்தச் சங்கம் ரெஜிஸ்டர் நம்பர் 5-1951.

இந்தச் சங்கத்தில் நிலமில்லாத ஏழைகளை மட்டும்தான் அங்கத்தினர்களாகச் சேர்த்து, அங்கத்தினர் ஒவ்வொருக்கும் பல கிராமங்களிலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்து, சர்க்காரிடம் பட்டாவும் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லிச் சந்தாத் துகை ஐந்து ரூபாய் வீதம் வசூல்செய்து ஒரு ரூபாய்க்கு மட்டும் சந்தா ரசீது கொடுத்து, பாக்கித் துகை நாலு ரூபாயும் அப்ளிகேசன் பாரம், எழுத்துக்கூலி, மேழிச்செல்வம் பத்திரிக்கை ஒன்று அனுப்புவது, இதற்குச் சிலவாகிறது என்று சொல்லி ரசீது கொடுக்கப்படவில்லையென்று தெரிகிறது.

நிலமில்லாதவர்களுக்கு, இனமாகச் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை நபர் ஒன்றுக்கு ஐந்து ஏக்கர் வீதம் சங்கம் வாங்கிக் கொடுக்கப்போகிறதென்றவுடன் பல ஆயிரக்கணக்கான ஏழைகள் சந்தாச் செலுத்தி அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். இதில் ஹரிசனங்களே, பெருமளவில் சேர்ந்திருக்கிருர்கள். இந்த பிர்க்கா விவசாய சங்கம் மற்றும் வேறு பிர்க்காக்களிலுள்ள புறம்போக்கு நிலங்களையெல்லாம் பிரித்துக் கொடுத்ததாகச் சந்தா ரசீதின் பின்புறத்தில் எழுதிக்கொடுத்திருக்கிருர்கள்.

சங்கத்திற்கு சந்தா வசூல் நின்றவுடன் சங்கம் செயல்படவுமில்லை, கலைக்கவுமில்லை. சங்கத்தின் வசூல் நிதியும் எந்த பேங்கிலும் போடப்படவுமில்லை. இதுவரை ஒன்பது வருஷங்களாகியும் அங்கத்தினர்களுக்கோ பொதுமக்களுக்கோ எந்தக் கணக்கும் கொடுக்கவில்லை. ஏழை அங்கத்தினர்களோ......பிள்ளை அவர்களுக்குப் பயந்து பேசாமலும் ஒன்று நடவடிக்கை எடுக்கமுடியாமலும் இருந்துவருகிருர்கள்.

28-8-59-ல் அண்டர்காடு கிராமத்தில், மன்னார்குடி ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டுறவு விவசாய சங்கத் துவக்க விழாவில்...எம். எல். ஏ. அவர்கள் கூட்டுறவினல்தான் ஏழைகள் முன்னேற முடியுமென்றும் தானும் அதற்காகப் பாடுவதாகவும் பேசினர். அதன் பிறகு பேசிய கருப்பப்புலம் பி. வெங்கடாசலத்தேவர், கூட்டுறவு முறையில் முன்னேற வகை செய்யும்படியும் இதற்கு சங்கம் செயல்பட வேண்டியது அவசியமென்றும், நிதியைப் பற்றித் தெரியாமலிருப்பது நல்லதல்லவென்றும் இதைப்பற்றிக் கவனமெடுத்துக்கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார்.

பிறகு, தான்...பிர்க்கா விவசாயிகள் சங்க தலைவராகயிருந்தபோதிலும் சந்தாத் துகையைப் பற்றித் தெரியாதென்றும், காரியதரிசியிடம்தான் இருக்கிறதென்றும், மேற்படி சங்க அங்கத்தினர்களுக்கு நிலம் வேண்டுமானல் கோடியக்கரைக்கு மேற்கே கடற்கரைக்கு அருகில் சுமார் இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களை வாங்கிக்கொடுப்பதாகவும் சொன்னர்.

சட்டமறிந்த சட்ட சபை மெம்பராகவும் சங்கத்தின் தலைவராகவுமுள்ள... அவர்கள் சந்தாநிதியில் ஒருகாசாவது தன்னிடமில்லாதிருந்தால் ஒன்பது வருஷங்களாகக் காரியதரிசியின் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்காமலிருக்கவேண்டும் ?.......சொன்ன மேற்கண்ட இரண்டு லட்சம் ஏக்கர்களும் உப்போ அல்லது நெல்லோ சாகுபடி செய்யக்கூடிய இடமாகயிருந்தால் அரசாங்கம் சும்மாயிருக்குமா ? அந்த இடம் கடல் தண்ணீர் தேங்கி மீன்பிடிக்குமிடமாகயிருந்துவருகிறது. தென்றல் காற்று அடிக்கும் காலங்களில் மேற்கண்ட இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களுமே கடல்தண்ணீர் வந்து நிரம்பிவிடும்... எம். எல். ஏ. அவர்கள் சால்ட் சிண்டிகேட் பிரசிடெண்டாக இருந்தபோது இந்த இரண்டு லட்சம் ஏக்கர்களில் வடக்குக்கரை அருகில் கொஞ்ச இடத்தை உப்புச் சாகுபடி செய்துபார்க்கக் கூட்டுறவு சொஸைட்டி அரசாங்கத்துக்கு மனுச் செய்ய.....தங்களுடைய உப்பளங்களுக்குக் கடல்தண்ணீர் வரும் ரிசர்வாயராக இருக்கிறது. அந்த இடத்தைக் கொடுக்ககூடாது என்று ஆட்சேபித்ததன்பேரில் நின்றுவிட்டதை மறந்துவிட்டார்போலும்.

மேற்படி சந்தா ரசீதின் பின்புறத்தில் புறம்போக்கு நிலங்களின் இடம் சர்வே நம்பர் லெட்டர்களைக் காட்டிப் பிரித்துக் கொடுத்ததாக ஏமாற்றப்பட்டிருக்கிறது. அனுபவிக்க சங்கம் வகை செய்யவில்லை. இதற்குச் சான்ருக மேற்படி சங்கத்தின் 928-929 இந்த இரண்டு சந்தா ரசீதுகளை இத்துடன் தாக்கல் செய்திருக்கிறேன். சந்தாதார்கள்... பயந்து ஒன்றும் சொல்வதில்லை. இது விபரம் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
வி. ராசமாணிக்கத் தேவர்,
25-9-59,
கருப்பம்புலம் போஸ்ட்."

சில பல நிலைகளால், இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட காங்கிரசு எம்.எல்.ஏயின் பெயரைமட்டும் நீக்கியிருக்கிரேம். முதலமைச்சர் அவர்கள் இக்கடிதம் குறித்து என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் ? ஆளும் கட்சியாரின் தீய போக்குகளைக் களைய அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன ? அந்த எம். எல். ஏ. பிள்ளையாரின் செயல்களால் வெதும்பிக் கிடக்கும் அப்பகுதி மக்கள் அவற்றை அறிய வேண்டாமா? இது மட்டுமில்லை, அந்த எம். எல். ஏயின் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள்.

x x x

இந்த எம். எல். ஏ. தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் போகின்ற இடமெல்லாம் கண்ணீர் வடிப்பவர். "ஆண்டவன் திருமுன் சாதி வேறுபாடா ?" என்று ஆரவாரமாகப் பேசுபவர். ஆனல் அவர் ஊரையடுத்த ஒரு சிறு கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் இன்னும் கோவிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. மேடைகளில் கண்ணீர் வடிக்கின்ற அந்த வீராதி வீரர், போராட்டத் தளபதி, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனென்று கேட்கவும் இல்லை !

x x x

அடுத்த ஊரில் மட்டும்தான் தாழ்த்தப்பட்டோருக்குத் தொல்லைகள் என்று நினைக்க வேண்டாம். உப்புக் காய்ச்சும் உரிமை மறுத்த வெள்ளையனை எதிர்த்த இவர் வாழும் ஊரிலேயே, விடுதிக்குள் நுழைந்து, இருந்து, உணவுண்ண உரிமையற்றுக் கிடக்கின்றனர், தாழ்த்தப்பட்டவர்கள்.

அதை அவ்வூர்ப் பஞ்சாயத்தில் வேலை பார்த்துவரும் எக்சிகியூட்டிவ் ஆபீசர் திரு. வெங்கலவன் தனது மேலதிகாரி ஒருவர் வேலை மாற்றலாகிச் செல்கையில் அவருக்களிக்கப்பட்ட விருந்தில் அந்த எம். எல். ஏயை வைத்துக் கொண்டே பேசியிருக்கிருர். மனமொடிந்து சுட்டிக் காட்டியிருக்கிருர்.

"காந்தியார், நேரு ஆகியோர் போன்று ஒப்பற்ற தலைவராகிய... தார்...பிள்ளை அவர்கள் இருக்கும் இந்த ஊரிலேயே, அதுவும் அவர் வீட்டிற்குப் பின்புறத்திலேயே உள்ள ஒரு ஓட்டலில், தாழ்த்தப்பட்டவர்கள் டீ, காபி குடிப்பதற்கு இரண்டு கொட்டாங்கச்சிகள் கட்டித்தொங்க விடப்பட்டிருப்பதைக் கண்டு மனம் நொந்தேன். ஓட்டலுக்குக் கொடுத்திருக்கும் லைசென்சைக் கிழித்தெறிந்துவிடுவோமா என்று கூட எண்ணினேன். ஆனல்...எம். எல். ஏ அவர்கள் இதைக் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்!" என்று அந்தப் பஞ்சாயத்து அதிகாரி பேசியிருக்கிருர். அவரே நடவடிக்கைகள் மேற்கொண்டால், தனிப்பட்ட பல தொல்லைகள் நேரிடும் என்பதால் தான் ஒதுங்கியிருக்கிருரோ, என்னவோ ?

x x x

இத்தனைக் கொடுமைகள் நடந்தும், மாநில அரசினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் தெரியுமா ? ஆயக்காரன் புலம் மண்டலக் காங்கிரசுக் குழுத் தலைவர் அனுப்பிய மனுபற்றித் துப்பறியும் போலீசார் வந்து நிலை அறிந்து போனதாகமட்டும் அறிகிரேம். ஆனல் அதற்குப்பின் எந்த ஒலியும் காணேம் ! போலீசார் கனம் காமராசருக்குத் தந்த செய்தி என்ன ? அவைபற்றி முதலமைச்சர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ? அவற்றை மக்கள் மன்றத்திற்குத் தெரிவித்தால்தான் மாநில அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் ! நம்பிக்கை ஏற்படும் !

—செழியன்.

அடுத்த இதழில்...?

கண்ணதாசன்

ராஜிநாமா !

"கல்வி"

ஆங்கிலம் எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும் படிக்கவும், பேசவும் ஒரே வருடத்தில் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்படும்.

மாதம் ரூ. 2.

விபரங்கள் இலவசம்.

திநியூ கல்வி அசோசியேஷன்,
திருப்பூர் (கோவை மாவட்டம்)

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர். வெளியிடுபவர் : ராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
டெலிபோன் நம்பர் 85310.